23.09.2015

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## தென்னையில் ஊடு பயிராக பப்பாளி, எலுமிச்சை



தென்னந்தோப்பில் ஊடு பயிராக பப்பாளி, எலுமிச்சை பயிரிட்டு அதன் மூலம் அதிக மகசூல் கண்டு சாதனை படைத்து வருகிறார் ஸ்ரீவில்லிபுத்தூர் விவசாயி நடராஜன்.

கோட்டைத்தலைவாசல் தெருவை சேர்ந்த இவர், கடந்த 23 ஆண்டாக விவசாயம் செய்து வருகிறார். ஸ்ரீவில்லிபுத்தூரின் மேற்கே திருவண்ணாமலை பகுதியில் 50 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. 5ஏக்கர் தென்னந்தோப்பில், ஊடுபயிராக தைவான் நாட்டு ரெட்லேடி என்ற ரக பப்பாளியை பயிரிட்டுள்ளார். கடந்த ஒன்றரை ஆண்டிற்கு முன்பு பயிரிட்ட பப்பாளி 9 மாதங்களில் நல்ல மகசூலை கொடுத்துள்ளது. ஒரு ஏக்கருக்கு 60 டன் பப்பாளி உற்பத்தியாகிறது. இதை தேனி

மாவட்டத்தை சேர்ந்த மொத்த வியாபாரிகள் கொள்முதல் செய்து, கொச்சி, எர்ணாகுளம், தூத்துக்குடி துறைமுகங்கள் மூலம் வெளிநாட்டுக்கு அனுப்புகின்றனர். இந்த பழங்கள் நல்ல சுவை கொண்டது. கெட்டு போகாது. சர்க்கரை நோயாளிகளும் சாப்பிடலாம் என்கிறார் விவசாயி நடராஜன்.

அவர் கூறியதாவது: சரியான நீர் மேலாண்மை, உர நிர்வாகம், கண்காணிப்பு இருந்தால் பப்பாளி பயிரிட்டு நல்ல மகசூல் பெறலாம். உரம், மருந்து அடித்தல், வேலையாட்கள் கூலி என ஏக்கருக்கு ரூ.ஒரு லட்சம் வரை செலவிட்டு மிகுந்த கவனத்துடன் செயல்பட்டால் ஏக்கருக்கு ரூ. 5லட்சம் வரை லாபம் ஈட்டலாம். இன்றைய காலத்தில், விவசாயத்தை பொறுத்தவரை காலத்திற்கு தகுந்தாற்போல் மாற்றி யோசித்து பயிரிடவேண்டும். நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி நீர் மேலாண்மையை கடைப்பிடித்து அதிக மகசூல் ஈட்டலாம்,என்றார். தொடர்புக்கு 89039 66576

**- என்.பாலமுருகன்,**

**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**பாரம்பரிய முறையில் நாட்டுக்கோழிகளை அடை வைக்கும், வளர்க்கும் முறைகள்**



இன்று தமிழ்நாடு முழுவதும் நாட்டு கோழி வளர்ப்பு லாபகரமாக உள்ளது. நாட்டுக்கோழி முட்டை, கறிக்கடை, நாட்டுக்கோழி பிரியாணி என்று கடைகள் முளைத்து விட்டன. பலர் இறைச்சி கோழிகளைச் சாப்பிடுவதை நிறுத்தி விட்டார்கள். நாட்டுக்கோழிகள் தொன்று தொட்டு வீடு, காடு, பண்ணைகளில் விவசாய நிலங்களில் வளர்க்கப்பட்டு வருகிறது.

இதில் சித்து, குருவை, கரிச்சி, கருங்கோழி, பட்டை, போந்தா, செவலை, மயில்கால என்று ஏராளமான வகைகள் உள்ளன. ஒவ்வொரு வகைக்கும் குணநலன்கள் வேறுபடும். இவற்றை எப்படி அடை வைப்பது? எப்படி வளர்ப்பது? என்பது ஒரு கலை ஆகும். செம்மண்ணில் அடை வைப்பது சாலச் சிறந்தது. செம்மண்ணில் சிறிது விறகு அடுப்பு சாம்பல் கலப்பது கிருமிகளைத் தடுக்கும். மண்ணில் சிறிய இரும்பு துண்டை புதைத்து வைத்தால் பட்டாசு, இடி போன்ற சப்தங்களை உள்வாங்கி விடும். அடுப்புக்கரி மண்ணின் ஈரப்பதத்தை உறிஞ்சும். இதையும் சிறிது கலக்கலாம்.

காலை 4-6 மணியில் அடை வைக்க வேண்டும். முட்டைக்கு தேவையான 100 டிகிரி பாரன்ஹீட் வெப்பமும், 87.5 டிகிரி குறைந்த அளவும் தேவை. 27 நாளில் தாய்க்கோழியின் வெப்பத்தால் குஞ்சு வெளி வரும் அவற்றை

கண்ணும் கருத்துமாக பாதுகாத்தால் நல்ல விலையில் 3 மாதங்களில் விற்பனை செய்யலாம்.

**- எம்.ஞானசேகர், விவசாய ஆலோசகர், 93807 55629**

gnanam_nidco@yahoo.co.in

## *சின்ன சின்ன செய்திகள்*



**வேளாண்மையில் நவீன பண்ணைக்கருவிகள்:** நம் நாட்டு வேளாண்மைக்குத் தகுந்தவாறு பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்கள் வேளாண்மை பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் வாயிலாக பெரும்பாலான விவசாய கருவிகள் நம் விவசாயிகள் பயன்படுத்த பெரிதும் வழிவகை செய்கின்றன. உழவு முதல் அறுவடை பின் நேர்த்தி வரை பல்வேறு இயந்திரங்கள் மற்றும் கருவிகள் உருவாக்கப்பட்டு, அரசாங்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு மானிய விலையில் தரப்பட்டு வேளாண் உற்பத்தி செலவை குறைக்க உதவுகின்றன.

உழவிற்கு பயன்படும் கருவிகள், விதை விதைக்கும் கருவிகள், களை மற்றும் இடை உழவு கருவிகள், பயிர் பாதுகாப்பு கருவிகள், அறுவடை கருவிகள், அறுவடைக்கு பின் செய்நேர்த்தி கருவிகள் செயல்பாட்டில் உள்ளன.

நன்செய் நிலங்களில் நேரடி நெல் விதைக்கும் கருவி, இறவையில் டிராக்டர் கொத்துக் கலப்பையுடன் இணைந்த விதை விதைக்கும் கருவி,

நெல் நாற்று நடும் கருவியான, யான்ஜி சக்தி நாற்று நடும் கருவி, யான்மாக் நாற்று நடவு இயந்திரம், கொரியாவகை நடந்து இயக்கும் நடவு இயந்திரம், நெற்பயிரில் களை எடுக்கும் கருவி, விசை களையெடுப்பான், இன்ஜினால் இயங்கும் நெல் அறுவடை இயந்திரம் ஒன்றுபட்ட நட்டு அறுவடை செய்யும் இயந்திரம் செயல்பாட்டில் உள்ளன.

தோட்டக்கலைப்பயிர்கள் சாகுபடியில் பயன்படும் குழித்தட்டில் விதையிடும் கருவி, காய்கறி நாற்றுக்கள் உற்பத்திக்கான குழித்தட்டில் விதையிடும் தானியங்கி கருவி, டிராக்டரினால் இயங்கும் காய்கறி நாற்று நடக்கூடிய இயந்திரம், டிராக்டரினால் இயங்கும் குழி தோண்டும் கருவி, சுழலும் மண்வெட்டி, களை எடுக்கும் கருவி, வாழை இலை அறுவடை செய்ய உதவும் தாங்கும் சாதனம், டிராக்டரில் இயங்கும் வாழைக்கட்டைகளை அகற்றும் கருவி, மரங்களிலிருந்து மா, சப்போட்டா, கொய்யா பழங்களை பறிப்பதற்கான கருவிகள், தென்னை மரம் ஏறும் கருவி, மஞ்சள் கரணை பிரித்தெடுக்கும் கருவி, மஞ்சள் அறுவடை செய்யும் கருவி, டிராக்டரால் இயங்கும் மரவள்ளிக் கிழங்கை தோண்டி எடுக்கும் கருவி, தேங்காய் பறிப்பதற்காக உயர்மட்டத் தளம், மானாவாரி சாகுபடிக்கேற்ற கருவிகளை தவிர இன்னும் பலப்பல இயந்திரங்கள் கருவிகள் கண்டுப்பிடிக்கப்பட்டு விவசாயிகளின் இயந்திரமயமான விவசாயத்தை மேற்கொண்டு முன்னேற்றம் பெறலாம்.

மேலும் விபரங்களுக்கு: பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண்மை இயந்திரவியல் ஆராய்ச்சி மையம், வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், த.வே.ப.கழகம், கோயம்புத்தூர்-641 003. தொலைபேசி : 0422 - 245 7576.

**பதநீர் :** பனையின் முதன்மையான விளைபொருள் பதநீர். பனையின் ஆண் மற்றும் பெண் மஞ்சரிகளில் இருந்து பதநீர் எனப்படும் சுவை மிகுந்த சாறு கிடைக்கிறது. பதநீர் சுவையாகவும், ஓரளவு அமிலத்தன்மையுடனும் இருக்கும். காலைப் பதநீரும், மாலைப்பதநீரும்

பருகுவதற்கு சுகம். பதநீர் கிடைக்கும் இடங்களில், குறிப்பாக மழை மற்றும் காற்று காலங்களில் பதநீரின் தரம் குறையும். ஒரு பனையிலிருந்து 3 முதல் 5 மாதங்கள் வரை பதநீரைப் பெறலாம். இதில் 3 மாதங்கள் அதிக அளவில் பதநீர் கிடைக்கும். பானைகளிலிருந்து பதநீரைப் பெற ஏதுவாக சில ஓலைகளை வெட்டி அப்புறப்படுத்தி விட வேண்டும். பனையில் 30 சதம் வரை ஓலைகளை வெட்டுவதால் பதநீர் உற்பத்தி மற்றும் பதநீர் சுரப்புக் காலம் அதிகரிக்கும். பெண் பனைகள் ஆண் பனைகளைக் காட்டிலும் 33 சதம் முதல் 50 சதம் வரை அதிகம் பதநீரை தரும். ஆண் பனைகளில் டிசம்பர் முதல் பிப்ரவரி வரையும், பெண் பனையில் பிப்ரவரி முதல் மார்ச் வரையிலும் பதநீர் கிடைக்கும். ஒருபனை மரம் 12 ஆண்டுகளுக்குப் பிறகு ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 60 லிட்டர் பதநீர் தர ஆரம்பிக்கும். இது அடுத்தடுத்த ஆண்டுகளில் 70,80,90,100 லிட்டர் பதநீர் எடுக்கலாம். பனை மரத்தில் ஆயுள் ஏறத்தாழ 150 ஆண்டுகள்.
பதநீரை காய்ச்சி அது பாகுபோல் ஆனதும், அந்தப்பாகினை மணல் தரையில் விசாலமான சிரட்டை (தேங்காய் ஓட்டின் ஒரு பாதி) மேல் மேல் நோக்கி இருக்குமாறு அதனைப்புதைத்து அதனுள் பாகினை ஊற்ற வேண்டும். பின்னர் அந்தப்பாகு ஒன்றிரண்டு நாட்களில் நன்கு கட்டியாக மாறும் வரை, அப்படியே வைத்திருக்க வேண்டும். அதன்பின் ஒவ்வொரு சிரட்டையையும் எடுத்து, தலைகீழாக வைத்து ஓரத்தில் ஒரு தட்டு தட்டினால் உள்ளிருக்கும் கருப்பட்டி, அச்சிலிருந்து விழும் சர்க்கரைப் போல் விழுந்து விடும். கருப்புக் கட்டிகளை பின்னர் கசிந்து விடாமல் இருக்க புகைப்பதனம் செய்யலாம். பதனம் செய்த கருப்பட்டிகளை பல மாதங்கள் கெடாமல் சேமித்து வைக்கலாம். இன்று 10 கிலோ கருப்பட்டியின் விலை ரூ.1500 - 1600.
கருப்பட்டி முழுக்க முழுக்க இயற்கையானது. உடல் நலத்திற்கு ஏற்றது. ஒரு துண்டு கருப்பட்டியை கடித்து அரை சொம்பு தண்ணீரைக் குடித்தால்

பசியாறும். மேலும் விபரங்களுக்கு: பேராசிரியர் வெ.சுந்தரராஜ், அலைபேசி : 90030 13634.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## மேட்டூர் அணையின் நீர்வரத்து அதிகரிப்பு

மேட்டூர் : கர்நாடக அணையிலிருந்து திறக்கப்பட்ட நீரால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 6,197 கனஅடியிலிருந்து 8,371 கனஅடியாக அதிகரித்தது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 67.58 அடியாகவும், நீர் இருப்பு 30.65 டி.எம்.சி.,யாகவும் உள்ளது. மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 13 ஆயிரம் கனஅடி நீரும், அணையிலிருந்து கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 800 கனஅடி நீரும் திறக்கப்பட்டது.

## சிங்காநல்லூர் குளம் காக்க 'செக்போஸ்ட்'



கோவை:கோவை சிங்காநல்லூர் குளக்கரையில் கட்டடக்கழிவு மற்றும் குப்பை கொட்டுவதை தடுக்க, மாநகராட்சி சார்பில் 'செக்போஸ்ட்'

அமைக்கப்பட்டுள்ளது.கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலத்துக்கு உட்பட்ட, சிங்காநல்லுார் குளம் 850 ஏக்கர் பரப்பில் உள்ளது. பல ஆண்டுகளாக பராமரிப்பின்றி இருந்த குளம் கடந்த ஜன., மாதம் சுத்தம் செய்யப்பட்டது.

மாநகராட்சி நிர்வாகம், 35 லட்சம் ரூபாய் செலவில், குளத்தில் இருந்த ஆகாயத்தாமரையை அகற்றி, குளத்தின் நுழைவாயிலை புதுப்பித்து, சிறுவர் விளையாட்டு உபகரணங்கள் முழுமையாக மாற்றியமைத்தது.

பூங்காவை ஒட்டி, குளத்தினுள் படகுத்துறை அமைக்கப்பட்டது. சூலுாரில் உள்ள தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து, வாடகை அடிப்படையில் பரிட்சார்ந்த முறையில், 10 நாட்கள் படகு சவாரி நடத்தப்பட்டது. அதன்பின், குளத்தில் நீர்மட்டம் சரிந்ததால், படகு சவாரி நிறுத்தப்பட்டது.

மாநகராட்சி நிர்வாகம், இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் சுற்றுலா துறை இணைந்து முத்தரப்பு ஒப்பந்தம் செய்து, குளத்தில் படகு போட்டிக்கான சிறப்பு பயிற்சி மையம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், சிங்காநல்லுார் குளத்தினுள், சாக்கடை கழிவுநீர் கால்வாய் கலப்பதை தடுக்க, அதே இடத்தில், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.குளத்தின் கரை சீரமைக்கப்பட்டு, கட்டடக்கழிவு மற்றும் குப்பையை குளத்தினுள் கொட்டுவதை தடுக்கும் வகையில், இரும்பு தடுப்பு அமைக்கப்பட்டுள்ளது. அதையும் மீறி, குளக்கரையில் கட்டடக்கழிவுகள் கொட்டப்படுவது தொடர்ந்தது.

அதனால், குளக்கரை பாதைக்கு 'செக்போஸ்ட்' அமைத்து மாநகராட்சி நிர்வாகம் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதனால், குளக்கரை ரோடு கழிவுகள் இன்றி பளிச்சிடுகிறது.மாநகராட்சி அதிகாரிகள் கூறுகையில், 'குளத்தின் கரையை பாதுகாக்கவும், குளத்தினுள் கழிவுகள் கொட்டுவதையும் தடுக்கும் வகையிலும், 'செக்போஸ்ட்' அமைக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த நிறுவனங்கள் மூலம் காவலர்கள் நியமித்து, குளக்கரை பாதுகாக்கப்படுகிறது.

'ஆனால், இரவு நேரத்தில், சிலர் ரோட்டோரத்தில் கட்டடக்கழிவுகளை கொட்டி செல்கின்றனர். கட்டுமான துறையில் ஈடுபட்டுள்ளவர்கள், மாநகராட்சி நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு கொடுத்து, ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் மட்டுமே கட்டட கழிவுகளை கொட்ட வேண்டும்' என்றனர்.

## காவிரி-வைகை-குண்டாறு இணைப்பு; உயர்நீதிமன்றம் உத்தரவு

மதுரை : காவிரி-வைகை-குண்டாறு இணைப்புத் திட்டத்தை நிறைவேற்ற கோரிய வழக்கில், 'தமிழக அரசின் திட்ட அறிக்கை கிடைக்காத பட்சத்தில், நடவடிக்கை மேற்கொள்ள முடியாது,' என்ற மத்திய அரசின் பதில் மனுவை ஏற்ற உயர்நீதிமன்றம் மதுரைக் கிளை, வழக்கை முடித்தது.

மதுரை சுந்தரராஜ் தாக்கல் செய்த பொது நல மனு: மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர் மாவட்டங்களில் நிலத்தடி நீர் மட்டம் 1000 அடிக்கு கீழ் சென்று விட்டது. தென் மாவட்டங்களில் வறட்சியால், விவசாயத்தில் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.காவிரி-வைகை-

குண்டாறு இணைப்பு திட்டம் பற்றி, தமிழக பொதுப்பணித்துறை செயலரிடம், தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் விபரம் கோரினேன். அவர், " திட்ட மதிப்பு 5,166 கோடி ரூபாய். திட்டத்தின்படி 258 கி.மீ., துாரம் கால்வாய் அமைக்கப்படும். காவிரியின் உபரிநீர் வைகை, குண்டாறுக்கு திருப்பி விடப்படும். நிர்வாக ரீதியான ஒப்புதலுக்கு பின் பணி துவங்கும்," என பதிலளித்தார்.

தமிழக முதல்வர் 2014 ஜூன் 3 ல் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில், "காவிரி-வைகை-குண்டாறு இணைப்புத் திட்டத்திற்கு 5,166 கோடி ரூபாய் அனுமதிக்க வேண்டும்," என்றார். நிதி ஒதுக்கவில்லை.இத்திட்டத்திற்கு 2003-2004 ல் 2,673 கோடி ரூபாய் ஆகும் என மதிப்பிடப்பட்டது. தற்போது திட்ட மதிப்பு 5,166 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. தென் மாவட்ட மக்கள் பயனடையும் வகையில் காவிரி-வைகை-குண்டாறு இணைப்புத் திட்டத்திற்கு 5,166 கோடி ரூபாயை மத்திய, மாநில அரசுகள் ஒதுக்கி, விரைந்து நிறைவேற்ற உத்தரவிட வேண்டும். இவ்வாறு, சுந்தரராஜ் மனு செய்திருந்தார். நீதிபதிகள் ஆர்.சுதாகர், வி.எம்.வேலுமணி அமர்வு விசாரித்தது. மனுதாரர் வழக்கறிஞர் எம்.திருநாவுக்கரசு ஆஜரானார்.

மத்திய நீர்வளத்துறை ஆணைய (கண்காணிப்பு) இயக்குனர் அழகேசன் தாக்கல் செய்த பதில் மனு: காவிரி-வைகை-குண்டாறு இணைப்புத் திட்ட அறிக்கையை தமிழக அரசு 2012 ல் சமர்ப்பித்தது. அது மத்திய அரசின் வழிகாட்டுதல்படி இல்லை. மத்திய அரசின் வழிகாட்டுதல்படி சில மாற்றங்கள் செய்து தருமாறு 2012 மே 28 ல் ல் தமிழக அரசிடம் வலியுறுத்தினோம்; பதில் இல்லை.தமிழக அரசின் திட்ட அறிக்கைக்காக காத்திருக்கிறோம். அறிக்கை கிடைக்காத பட்சத்தில், எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது. இவ்வாறு மனு செய்திருந்தார்.இதை பதிவு செய்த நீதிபதிகள், 'அரசின் கொள்கை

முடிவுகளில் தலையிட விரும்பவில்லை. வழக்கு முடிக்கப்படுகிறது,' என்றனர்.

## மாவட்டத்தில் கடந்த ஆண்டு கனிமவள வருவாய்...ரூ.25.22 கோடி1 டுமேம்பாட்டு பணிகளுக்கு 75 சதவீதம் விடுவிப்பு

வாலாஜாபாத்,:காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 53 ஊராட்சிகளில், கனிமவளத்தின் மூலமாக, கடந்த ஆண்டு 25.22 கோடி ரூபாய், வருவாய் கிடைத்து உள்ளது. இந்த நிதியில், 75 சதவீதத்தை, அந்தந்த ஊராட்சிகளுக்கு, மாவட்ட நிர்வாகம் விடுவித்து, பயனுள்ள பணிகளை செய்ய அறிவுறுத்தி உள்ளது.காஞ்சிபுரம் மாவட்டத்தில், 53 ஊராட்சிகளின் கட்டுப்பாட்டில், 125க்கும் மேற்பட்ட, கல் குவாரிகள் இயங்குகின்றன. இந்த குவாரிகளின் மூலம் கிடைக்கும் வருவாயில், ஒரு குறிப்பிட்ட தொகை, ஊராட்சி நிர்வாகங்களுக்கு, கனிம வளத்துறை மூலமாக, மாவட்ட நிர்வாகத்திடம் வழங்கப்படும். இந்த தொகையில், 75 சதவீதத்தை, மாவட்ட நிர்வாகம், சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு வழங்கி வருகிறது.கடந்த ஆண்டு, ஏப்ரல் மாதத்தில் இருந்து, நடப்பாண்டு மார்ச் மாதம் வரை, கனிம வளத்தின் மூலமாக, 53 ஊராட்சிகளுக்கு, 25 கோடியே 22 லட்சத்து 53 ஆயிரத்து 170 ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது. இந்த, கனிமவள நிதியை, மாவட்ட கருவூலத்தில் இருந்து, ஊராட்சிகளின் உதவி இயக்குனரின் பரிந்துரையின் பேரில், அந்தந்த ஊராட்சி நிர்வாகங்களின், மூன்றாம் வங்கி கணக்கு எண்ணில், ஒரே தவணையாக விடுவிக்கப்படும்.கடந்த ஆண்டு, கனிமவளத்தின் மூலமாக கிடைத்த நிதியில், 75 சதவீத நிதியான, 18 கோடியே 91 லட்சத்து 89 ஆயிரத்து 878 ரூபாயை, ஊராட்சி நிர்வாகங்களுக்கு, மாவட்ட நிர்வாகம் விடுவித்து உள்ளது.

ஆட்சியரிடம் அனுமதி பெற்று, ஊராட்சிகளில் மேற்கொள்ள வேண்டிய

பயனுள்ள பணிகளை செய்ய, இந்த நிதியை, அந்தந்த ஊராட்சி நிர்வாகங்கள், பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்கு, கீழ்க்காணும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டு உள்ளன.

* முறையான தொழில்நுட்ப அனுமதி பெற வேண்டும்

* பணிகளை, 2 லட்சம் ரூபாய்க்கும் குறைவான மதிப்பீட்டில் செய்யக்கூடாது

* பணிகள் நிறைவு பெற்றவுடன், வட்டார வளர்ச்சி அலுவலரின் பரிந்துரையின் பேரில், நிதி பெற்றுக் கொள்ளலாம்.இதுகுறித்து, ஊரக வளர்ச்சித் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், 'கடந்த ஆண்டிற்கான கனிமவள நிதியில் இருந்து, 75 சதவீத நிதி, அந்தந்த ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டு உள்ளது. எஞ்சி இருக்கும், 25 சதவீத நிதி, மாவட்ட வங்கி கணக்கில் இருப்பு வைக்கப்படும்' என்றார்.

## சம்பா பருவ சாகுபடிக்கு நெல் நாற்றுகள் தயார்

பொன்னேரி:சம்பா பருவ சாகுபடிக்கு, இயந்திரங்கள் மூலம் நடவுப்பணிகளை மேற்கொள்ள, பிளாஸ்டிக் தட்டுகளில், நெல் நாற்றுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

மீஞ்சூர் ஒன்றியத்தில், விவசாயிகள் சம்பா பருவ சாகுபடிக்கு, விளை நிலங்களை உழுது தயார்படுத்தி வருகின்றனர். ஒரு சில இடங்களில், நாற்று நடும் பணிகள் நடந்து வருகின்றன. பணியாட்களை கொண்டு நடவு பணிகளை மேற்கொள்வதற்கு மாற்றாக, இயந்திரங்கள் மூலம் நடவுப்பணிகளை மேற்கொள்வதில், விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.இதற்காக, பிரத்யேகமான முறையில், நாற்றுகள் வளர்க்கப்படுகின்றன. பிளாஸ்டிக் தட்டுகளில், உரத்துடன் கூடிய மண்ணை பரப்பி, அதில், விதை நெல்லை போட்டு, வலையால் மூடப்படுகிறது. 15 நாட்களுக்கு பின், ஒவ்வொரு நாற்றும், 15 செ.மீ., உயரம் வளர்ந்த பின், அவை, உழுது தயார் நிலையில் உள்ள

விளைநிலங்களில், இயந்திரங்கள் மூலம், நடப்படுகின்றன.ஒரு ஏக்கருக்கு, 75 பிளாஸ்டிக் தட்டுகளில் வளர்க்கப்படும் நாற்றுகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒன்றரை மணி நேரத்தில், ஒரு ஏக்கரில் நடவு செய்ய முடிகிறது. இயந்திர நடவு பபணிகளுக்காக, தேவராஞ்சேரி, சின்னகாவணம் உள்ளிட்ட இடங்களில், நாற்றுகள் வளர்க்கப்படுகின்றன.

## மேட்டூர் அணை நீர்வரத்து 6,197 கனஅடியாக அதிகரிப்பு

மேட்டூர்: கபினியில் இருந்து வரும் தண்ணீர் அதிகரித்துள்ளதால், மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று வினாடிக்கு, 6,167 கனஅடியாக அதிகரித்தது.

காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் குறைந்ததாலும், டெல்டா பாசனத்துக்கு தொடர்ச்சியாக, தண்ணீர் வெளியேற்றுவதாலும், கடந்த ஆக.,28 ம் தேதி, 93.5 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம், மளமளவென சரிய துவங்கியது. நேற்று முன்தினம் அணைக்கு வினாடிக்கு, 1, 114 கனஅடி நீர் மட்டுமே வந்தது. இருநாட்களுக்கு முன்ப, கபினியில் இருந்து வினாடிக்கு, 4,000 கனஅடி நீர் காவிரியாற்றில் வெளியேற்றப்பட்டது. இந்த நீர் வந்து சேர்ந்ததால், நேற்று மேட்டூர் அணை நீர்வரத்து வினாடிக்கு, 6,197 கனஅடியாக அதிகரித்தது. எனினும், பாசனத்துக்கு வினாடிக்கு, 13,800 கனஅடி நீர் வெளியேற்றுவதால், மேட்டூர் அணை நீர்மட்டம் கடந்த, 26 நாளில், 25 அடியும், நீர்இருப்பு, 25 டி.எம்.சி.,யும் சரிந்தது. நேற்று கே.ஆர்.எஸ்.,

அணையில் இருந்து வினாடிக்கு, 4,500 கனஅடி நீர் திறக்கப்பட்டது. இந்த நீர் இரு நாட்களில் வந்து சேரும் என்பதால், வரும் நாட்களில் மேட்டூர் அணை நீர்வரத்து மேலும் உயரும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

### ரூ.22 லட்சத்துக்கு வர்த்தகம்

சேலம்: சேலம் மாவட்ட வேளாண் கூட்டுறவு சந்தையில் மஞ்சள், பருத்தி, மற்றும் நிலக்கடலை ஆகியவை விற்பனை செய்யப்படுகிறது. நிலக்கடலை வாரத்தில் ஏழு நாட்களும், மஞ்சள் செவ்வாய்க்கிழமை மட்டும் விற்பனை செய்யப்படுகிறது. நேற்று, 50 விவசாயிகள் 400 மூட்டை மஞ்சளையும், 200 விவசாயிகள் 1,600 மூட்டை நிலக்கடலையும் விற்பனைக்காக கொண்டு வந்தனர். மஞ்சள் ஏழு லட்சம் ரூபாய்க்கும், நிலக்கடலை, 15 லட்சம் ரூபாய்க்கும் என மொத்தம், 22 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

### இடி, மின்னலுடன் பலத்த மழை

சேலம்: சேலத்தில், நேற்று இரவு பலத்த இடியுடன் கொட்டி தீர்த்த மழையால், ரோடுகளில் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடியது. வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்தை சந்தித்ததால், போக்குவரத்து பாதித்தது.

சேலத்தில், நேற்று பகலில் வெயில் சுட்டெரித்த நிலையில், இரவு 9.45 மணிக்கு பலத்த இடியுடன் மழை கொட்டியது. மழையின் தாக்கத்தை விட இடி, மின்னல் தொடர்ந்து, 45 நிமிடங்கள் இருந்ததால், வீடுகளில் முதியவர்கள், சிறுவர்கள் பீதி அடைந்தனர். தொடர்ந்து மழையும்

கொட்டியது. இதனால், செவ்வாய்ப்பேட்டை, ஜங்ஷன், கிச்சிபாளையம், டவுன், அம்மாபேட்டை பகுதிகளில் வெள்ள நீர் தாழ்வான பகுதிகளில் உள்ள வீடுகளில் புகுந்ததால், பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். மின்னல், இடியுடன் பலத்த மழை பெய்ததால், வெள்ள நீர் ரோடுகள், முக்கிய வீதிகளில் ஓடிய நிலையில், போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மின்னல், இடி காரணமாக வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்தை சந்தித்தனர்.

## 850 மூட்டை மஞ்சள் ரூ.42 லட்சத்துக்கு ஏலம்

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று நடந்த ஏலத்தில், 850 மூட்டை மஞ்சள், 42 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

ராசிபுரம் அடுத்த நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா, சேலம், ஆத்தூர், தலைவாசல் மற்றும் சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள் மஞ்சள் அறுவடை செய்து ஏலத்தில் குவித்தனர். அதில், தலா, 65 கிலோ கொண்ட, 850 மூட்டைகள் இடம் பெற்றது. விரலி ரகம் அதிக பட்சம், 9,799 ரூபாய்க்கும், குறைந்த பட்சம், 7,219 ரூபாய்க்கும், உருண்டை ரகம் அதிக பட்சம், 7,959க்கும், குறைந்த பட்சம், 6,224 ரூபாய்க்கும் ஏலம் போனது. அதேபோல், பனங்காலி ரகம் அதிக பட்சம், 13 ஆயிரத்து, 800க்கும், குறைந்த பட்சம், 7,600 ரூபாய்க்கும் விற்பனையானது. மொத்தம், 850 மூட்டை மஞ்சள், 42 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

## கால்நடை மருத்துவமனை கேட்டு விவசாயிகள் கோரிக்கை

பள்ளிபாளையம்: சவுதாபுரம் பகுதியில், கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பள்ளிபாளையம் அடுத்த, சவுதாபுரம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள கிராமங்களில், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் அதிகளவில் ஆடு, மாடு, கோழி போன்ற கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். அவற்றின் மூலம் கணிசமான வருவாய் கிடைப்பதால், ஆர்வத்துடன், கால்நடைகளை வளர்த்து வருகின்றனர். அவ்வாறு வளர்க்கும் கால்நடைகளுக்கு நோய் தாக்கினால், எலந்தகுட்டையில் உள்ள கால்நடை மருத்துமனைக்கு ஓட்டிச் சென்று சிகிச்சை அளித்து வரவேண்டும். அதற்காக, நான்கு கி.மீ., தூரம் சென்று வரும் நிலை உள்ளது. இதனால் மக்கள் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். அவற்றை கருத்தில் கொண்டு சிலர், மருத்துவமனையில் மருந்து, மாத்திரை வாங்கி வந்து தாங்களே சிகிச்சை அளிக்கின்றனர். மேலும், தனியார் கால்நடை டாக்டரை அழைத்து வந்து சிகிச்சை அளிக்கின்றனர். விவசாயிகளின் சிரமத்தை கருத்தில் கொண்டு, சவுதாபுரம் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என, அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஒகேனக்கல் காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகாரிப்பு



ஒகேனக்கல்: ஒனேக்கல் காவிரி ஆற்றில், தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால், சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கர்நாடக அரசு கடந்த, சில மாதமாக, கே.ஆர்.எஸ்., கபினி உள்ளிட்ட அணைகளில் இருந்து காவரியில், தமிழகத்துக்கு திறந்து விடப்படும் தண்ணீர் அளவை வெகுவாக குறைத்தது. இதனால், 1,000 கனஅடிக்கு குறைவாக, தமிழக எல்லையான பிலிகுண்டலுவில், தண்ணீர் வரத்து வந்து கொண்டிருந்தது. ஒகேனக்கல்லுக்கு சுற்றுலா வந்த பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர். இந்நிலையில் கர்நாடக அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில தினங்களாக, வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இதனால், கர்நாடக அரசு கபினி உள்ளிட்ட அணைகளில் இருந்து, படிப்படியாக, தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விடும் அளவை அதிகரித்துள்ளததால், தமிழக எல்லையான பிலிகுண்டலுவுக்கு நேற்று முன்தினம் இரவு முதல், தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. குறிப்பாக, நேற்று அதிகாலை, வினாடிக்கு, 9,000 கன அடி தண்ணீர் வந்தது, காலை, 10 மணிக்கு வினாடிக்கு, 10,100 கனஅடியாக அதிகரித்தது. இது நேற்று மாலை வரை தொடர்ந்து. கர்நாடக அணைகளில் இருந்து, தண்ணீர் வரத்து அதிகரிக்க தொடங்கி

உள்ளதை அடுத்து, மத்திய நீர்வள அதிகாரிகள், தண்ணீர் வரத்து குறித்து தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

## ஏமாற்றும் பருவ மழையால் நிலக்கடலை விவசாயிகள் பாதிப்பு

தர்மபுரி: போதிய பருவ மழை இல்லாததால், நிலக்கடலை காய்ந்து, விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தில், கடந்த சில ஆண்டுகளாக, தென்மேற்கு பருவமழை மற்றும் வட கிழக்கு பருவமழை ஏமாற்றி வருகிறது. இதனால், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டு வந்த, சாகுபடி தொடர்ந்து குறைந்து வருகிறது. விவசாய தொழிலை செய்து வந்த பலர், வேறு தொழிலுக்கு மாறி வருகின்றனர். ஆனால், சில விவசாயிகள், மானாவாரி மற்றும் இறவை பாசனம் மூலம் நெல், கரும்பு, மஞ்சள், கேழ்வரகு, சாமை, பருத்தி, மரவள்ளி கிழங்கு, நிலக்கடலை உட்பட பல்வேறு பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர். இந்தாண்டு, குறைவாக பெய்த தென்மேற்கு பருவமழை காலத்தில், வட கிழக்கு பருவமழை கை கொடுக்கும் என்ற நம்பிக்கையில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், 5,000 ஏக்கருக்கு மேல், நிலக்கடலை சாகுபடி செய்தனர். ஆனால், தென்மேற்கு பருவ மழை எதிர்பார்த்தபடி பெய்யவில்லை. இதனால், எஸ். கொட்டாவூர் உட்பட, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், மானாவாரியாக சாகுபடி செய்த, நிலக்கடலைக்கு போதிய பாசன வசதி கிடைக்கவில்லை. நிலக்கடலை பால் பிடிக்கும் பருவத்தில், தண்ணீர் வசதியின்றி, காய்ந்து வருவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். ஒரு சில விவசாயிகள், விரைவில் வடகிழக்கு பருவமழை கை கொடுக்கும் என்ற நம்பிக்கையில், விலைக்கு தண்ணீர் வாங்கி, நிலக்கடலைக்கு, தண்ணீர் பாசனம் செய்து வருகின்றனர். ஆனால், சாதாரண விவசாயிகள், காய்ந்து வரும் பயிருக்கு தண்ணீர் வசதி செய்து தர முடியாமல் கண்ணீர் வடிக்கின்றனர். எனவே, தமிழக அரசு,

பாதிக்கப்பட்ட நிலக்கடலை விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### நாற்று நடவு செயல் முறை விளக்கம்

காரிமங்கலம்: காரிமங்கலம், கும்பாரஹள்ள பஞ்சாயத்துக்கு உட்பட்ட, கொல்லுப்பட்டியில், அட்மா திட்டத்தின் கீழ், நாற்று நடவும் செய்யும் முறை குறித்த விழிப்புணர்வு செயல் விளக்க பயிற்சி நடந்தது. நாற்று நடும் கருவியை பயன்படுத்தி, நாற்றுகளை நடவு செய்யும் முறை குறித்து, அட்மா திட்ட பணியாளர்கள், இப்பகுதி விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். இதில், 14 நாள் வயதுடைய, நாற்றானது, பாய் நாற்றங்கால் முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு சமப்படுத்தப்பட்ட, நடவு வயலில், கருவிகள் மூலம், 20க்கு 20 என்ற இடைவெளியில், சீராக நடவு செய்வது குறித்தும், குறைந்த நேரத்தில் நாற்றுக்கள் நடவு செய்வதால், 10 நாட்களுக்கு முன்பே, பயிர்கள் அறுவடைக்கு வருவது, அதிக விளைச்சல் பெறுவது குறித்து விரிவாக எடுத்து கூறப்பட்டது. இதில், பஞ்சாயத்து தலைவர் லட்சுமி மாது, அட்மா திட்ட பணியாளர்கள் இளவரசி, சேட்டு, பெரியசாமி மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

### வேடந்தாங்கலாக மாறும் கெலவரப்பள்ளி அணை: சுற்றுலா தலமாக அறிவிக்கப்படுமா?

ஓசூர்: வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்திற்கு வரும் வெளிநாட்டு பறவைகள், ஓசூர், கெலவரப்பள்ளி அணைக்கும் வருவதால், அது, சுற்றுலா தலமாக அறிவிக்கப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் அடுத்த, கெலவரப்பள்ளி அணைக்கு ஆண்டுதோறும் அக்டோபர் மாத இறுதியில், இனப்பெருக்கம், உணவு ஆகியவற்றை குறிவைத்து, ஆப்ரிக்காவை சேர்ந்த இரோசியன் கூட்,

கூழைகடா, ஐரோப்பிய நாட்டை சார்ந்த நார்த்தன் ஷோவலஸ், லிட்டில் கிரிப் போன்ற, 30 க்கும் மேற்பட்ட பறவைகள் வருகின்றன. ஆப்ரிக்க நாட்டில் மார்ச் மாதத்தில் இருந்தே கடும் வறட்சி நிலவும் என்பதால், மே மாதம் வரை, கூட இரோசியன் கூட் பறவைகளை கெலவரப்பள்ளி அணையில் பார்க்க முடியும். கூழைகடா பறவை நவம்பர் முதல், பிப்ரவரி மாதம் வரை, சென்னசந்திரம் கிராமத்தில் கூடு அமைத்து வாழ்வதுடன் இனப்பெருக்கமும் செய்கிறது. இந்த பறவையை காலை நேரத்தில் கெலவரப்பள்ளி அணையிலும், அதன் பின்னர், சென்னசந்திரம் கிராமத்திலும் பார்க்கலாம். இந்தியாவில் உள்ள அரிய வகை பறவைகளான, பைடு கிங்பிஷர், பிளக்விங்டு சில்ட், அவடாவட், ரெட் நெக்டு பால்கன், ஒயிட் ரேடு புல்புல் போன்ற பறவை வகைகளையும், பிப்ரவரி மாதம் வரை, கெலவரப்பள்ளி அணையில் காண முடியும். வெளிநாட்டு பறவைகள் மட்டுமின்றி, தெற்கு ஆசிய கண்டத்தில் உள்ள பறவைகள் மற்றும் குஜராத் உள்ளிட்ட மாநிலங்களில் உள்ள பறவைகளும், கெலவரப்பள்ளி அணைக்கு சீசன் நேரத்தில் வருகின்றன. அடுத்த மாத இறுதியில் இருந்தே வெளிநாட்டு பறவைகள் கெலவரப்பள்ளி அணைக்கு வரும் என்பதால், அவற்றை காண ,இப்போது இருந்தே சுற்றுலா பயணிகள் ஆர்வத்துடன் உள்ளனர்.

அக்டோபர் மாதம் இறுதியில் இருந்து தினமும் காலை, 6 முதல், 9 மணி வரை, கெலவரப்பள்ளி அணை கரையில் கூட்டம், கூட்டமாக தண்ணீரில் நீந்தி செல்லும் வெளிநாட்டு பறவைகளை பார்க்க முடியும். வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்துக்கு வரும் வெளிநாட்டு பறவைகள், ஆண்டுதோறும் சில குறிப்பிட்ட மாதங்கள் கெலவரப்பள்ளி அணைக்கும் வருவதால், இதை, அரசு சுற்றுலா தலமாக அறிவிக்குமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. மேலும், கெலவரப்பள்ளி அணையை சுற்றி, நவீன பூங்கா வசதி செய்து, சுற்றுலா பயணிகளின் வருகையை

அதிகரிக்க செய்ய வேண்டும் என, சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## குரங்குகள் எண்ணிக்கை அதிகரிப்பு: மான்களின் பலி குறைவு

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் வனப்பகுதியில் குரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், சிறுத்தை, புலி உள்ளிட்ட வனவிலங்குகளுக்கு, மான்கள் பலியாகும் எண்ணிக்கை குறைந்துள்ளது.

சத்தியமங்கலம் வனப்பகுதியில், கடந்த சில ஆண்டுகளாக குரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், சிறுத்தை மற்றும் புலிகளிடம், மான்கள் பலியாகும் எண்ணிக்கை குறைந்துள்ளதாக, வன ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து, உலகளாவிய இயற்கை நிதியகத்தின் மேற்கு தொடர்ச்சி மலை ஒருங்கிணைப்பாளர் பூமிநாதன் கூறியதாவது: கடந்த சில ஆண்டுகளாக மேற்கு தொடர்ச்சி மலையில், குறிப்பாக சத்தியமங்கலம், கடம்பூர் வனப்பகுதியில் குரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. குரங்குகளுக்கு வனவிலங்களை காட்டிலும், மனிதனால் ஆபத்து அதிகரித்து வருகிறது. மனிதர்கள், குரங்குக்கு உணவு பொருட்கள் கொடுப்பதால், அவை வாகனத்தில் அடிபட்டு இறக்கும் நிலை ஏற்படுகிறது. இதையும் தாண்டி தற்போது, குரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. குரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், சிறுத்தை, புலி, செந்நாய் போன்ற வனவிலங்குகளிடம் மான்கள் பலியாவது குறைந்துள்ளது. குரங்குகள் மரத்தின் மேல் அமர்ந்து

கொண்டு பழம், இலைகள் உள்ளிட்ட உணவுகளை சாப்பிடும். அப்போது, அது சாப்பிடும் அளவுக்கு வீணாக்கவும் செய்யும். அந்த பழம், இலைகளை மான்கள் சாப்பிடும். இதனால், குரங்குகள் அதிகம் இருக்கும் பகுதியில், மான்களும் அதிகம் காணப்படும். குரங்குகள் மரத்தின்மேல் அமர்ந்து கொண்டு இருப்பதால், சிறுத்தை, புலி போன்ற பெரிய வனவிலங்குகள் நடந்து வருவதை எளிதில் கண்டுகொள்ளும். அவைகளை பார்த்தவுடன், குரங்குகள் சத்தமிட்டு மான்களுக்கு எச்சரிக்கை கொடுக்கும். உடனே, எதிரி வரும் பக்கத்தை அறிந்து கொண்டு, அதற்கு எதிர்பக்கமாக மான்கள் ஓடி தப்பித்துக்கொள்ளும். இதனால், காட்டெருமை, காட்டுப்பன்றி போன்றவைகள், மான்களுக்கு பதிலாக சிறுத்தை, புலிகளுக்கு உணவாகும் நிலை ஏற்பட்டுள்ளது. குரங்குகள் எண்ணிக்கை அதிகரிப்பால், மான்களின் பலியாவது குறிப்பிட்டளவு குறைந்துள்ளது, என்றார்.

## 'நடப்பு பருவத்துக்கு உரத்தட்டுப்பாடு இல்லை': வேளாண் இணை இயக்குனர் தகவல்

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் நடப்பாண்டுக்கு, உரத்தட்டுப்பாடு இல்லை, என வேளாண் இணை இயக்குனர் (பொ) கார்த்திகேயன் தெரிவித்தார்.

மேலும், அவர் கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில், ஆக., 15ம்

தேதி கீழ்பவானியில் தண்ணீர் திறக்கப்பட்டது. தற்போது, ஆங்காங்கு நெல் நடவுப்பணிகள் துவங்கி உள்ளது. கீழ்பவானியில், 23 ஆயிரம் ஹெக்டரிலும், தடப்பள்ளியில், 5,600 ஹெக்டர், காலிங்கராயன் கால்வாயில், 2,000 ஹெக்டர் விவசாயம் செய்யப்படுகிறது. பவானிசாகரில் படிப்படியாக நீர் இருப்பு குறைந்து வருகிறது. நடப்பாண்டு தென்மேற்கு பருவமழை, 20 சதவீதம் குறைந்துள்ளது.

ஆனாலும், வடகிழக்கு பருவமழை அக்., மாதம் துவங்கும் என்ற நம்பிக்கை உள்ளது. எனவே, கீழ்பவானியில், 23,000 ஹெக்டரில் சாகுபடி பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கேற்ப, உரமும் இருப்பில் உள்ளது. மாவட்ட அளவில், கூட்டுறவில், 1,440 டன், தனியார் கடைகளில், 1,190 டன் என, 2,630 டன், டி.ஏ.பி., கூட்டுறவில், 1,390 டன், தனியாரிடம், 800 டன் என, 2,190 டன், எம்.ஓ.பி., கூட்டுறவில் 1,045 டன், தனியாரிடம், 1,265 டன் என, 2,310 டன், காம்ப்ளக்ஸ் உரம் கூட்டுறவில், 1,905 டன், தனியாரிடம், 1,020 டன் என, 2,925 டன் இருப்பில் உள்ளது. எனவே, தேவைப்படும் விவசாயிகளுக்கு முழு அளவில் உரம் வழங்க, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

**மாபெரும் மரம் நடும் திட்டம்: 50 சதவீத பணிகள் நிறைவு**

ஈரோடு: மாபெரும் மரம் நடும் திட்டம் மூலம், ஈரோடு மாவட்டத்தில், 50 சதவீத மரக்கன்றுகளை நடும் பணி நிறைவடைந்துள்ளதாக, ஈரோடு வனச்சரகர் முருகேசன் தெரிவித்தார்.

மேலும், வனச்சரகர் முருகேசன் கூறியதாவது: நடப்பாண்டில் தமிழக முதல்வர் ஜெயலலிதா பிறந்த நாள் தினத்தை முன்னிட்டு, ஆண்டுதோறும் மாபெரும் மரம் நடும் திட்டத்தின் மூலம், ஒவ்வொரு மாவட்டத்துக்கும், மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. ஈரோடு மாவட்டத்துக்கு மட்டும், 67,000 மரக்கன்றுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மரக்கன்றுகள் உற்பத்தி செய்யும் பணி, கடந்த ஐந்து மாதமாக பவானி, வெள்ளோடு, அந்தியூர் உள்ளிட்ட வனத்துறைக்கு சொந்தமான இடங்களில் நடந்தது. ஈரோடு வட்டாரத்துக்கு, 49,000 மரக்கன்றுகளும், அந்தியூர் வட்டாரத்துக்கு, 17,000 மரக்கன்றுகளும், சென்னம்பட்டி பகுதிக்கு, 8,000 என மரக்கன்று நட முடிவு செய்யப்பட்டது. அதில் முதற்கட்டமாக, ஈரோடு, பெருந்துறை,

சிவகிரி, பெருந்துறை சிப்காட், பவானி, அந்தியூர், சென்னம்பட்டி பகுதியில் இதுவரை, 38,500 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. தொடர்ந்து மரக்கன்று நடும் பணி நடந்து வருகிறது. மேலும், பஞ்சாயத்துகளில் ஆங்காங்கே, 2,500 மரக்கன்றுகள் நட முடிவு செய்யபட்டுள்ளது. அக்., மாத மழைக்காலத்துக்குள் அனைத்து மரக்கன்றுகளும் நட்டு முடிக்கப்படும். இவ்வாறு, அவர் கூறினார்.

**மானிய விலையில் 20 நெல் நடவு இயந்திரங்கள்: ஈரோடு மாவட்டத்துக்கு வழங்க ஒதுக்கீடு**

ஈரோடு: ஈரோடு மாவட்டத்துக்கு, 20 நெல் நடவு இயந்திரங்கள் மானிய விலையில் வழங்க, அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இதுகுறித்து, ஈரோடு மாவட்ட வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) கார்த்திகேயன் கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில், வேளாண் பணியாளர் பற்றாக்குறை அதிகம் உள்ளது. இதனால், இயந்திர நடவு முறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. நடப்பாண்டு, இம்மாவட்டத்தில், 4,600 எக்டேர் இயந்திரம் மூலம் நடவு செய்ய திட்டமிடப்பட்டு, 500 எக்டேர் நடவு செய்யப்பட்டுள்ளது. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனப்பகுதியில், அக்., - நவ., மாதம் மீண்டும் தண்ணீர் திறக்கப்பட்டு, நடவுப்பணி துவங்கும்போது, இலக்கு எட்டப்படும். இயந்திரம் மூலம் ஒரு எக்டேர் நடவு செய்ய, 7,500 ரூபாய் செலவில், அரை நாளில் பணி முடியும். இதற்கு, 3,000 ரூபாய் அரசு மானியமாக வழங்குகிறது. இதே பணியை, மனிதர்கள் மூலம், 50 பேர், இரண்டு நாட்கள் செய்து முடிக்க, 10,000 ரூபாய் தேவைப்படும். இயந்திர முறையில் நேரம், செலவு மிச்சம். தவிர, சாதாரண நாற்றங்கல் முறையில், 30 நாளுக்குப்பின், வயலில் நடவு செய்ய வேண்டும். பாய் முறை நாற்றங்கால் உருவாக்கினால், 15 நாளில் நடவுப்பணி செய்யலாம். இதனால், அறுவடை காலமும், 15 நாள் குறையும். சமமாகவும், சீராகவும்

நடவு செய்வதால், 5 முதல், 10 சதவீதம் மகசூல் அதிகரிக்கும். சாதா நடவில், எக்டேருக்கு, 7 டன் மகசூல் கிடைத்தால், இயந்திர நடவில், கூடுதல் மகசூல் கிடைக்கும். இதற்கான இயந்திரம், சீனாவில் இருந்து வரவழைக்கப்படுகிறது. ஒரு இயந்திரம், 10 லட்சம் ரூபாயாகும். ஈரோடு மாவட்டத்துக்கு, 20 இயந்திரங்கள் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. வேளாண் உதவி இயக்குனரை அணுகி, விவசாயிகள், அம்மா பண்ணை மகளிர் குழுவினர் பெறலாம். விவசாயிகளுக்கு, 2 லட்சமும், பெண்கள், எஸ்.சி., எஸ்.டி.,க்களுக்கு, 2.25 லட்சமும் மானியமாக வழங்கப்படும். அம்மா பண்ணை மகளிர் குழுவினர், இந்த இயந்திரத்தை வாங்கி, தொழிலாக செயல்படுத்தலாம். அவர்களுக்கு வங்கி கடன் வசதி செய்யப்படும். இனி வரும் காலங்களில், இயந்திர தேவை அதிகரிக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**மழையளவு குறைந்ததால் மீன் இன பெருக்கம் குறைகிறது: மீன் பல்கலைகழக துணைவேந்தர் தகவல்**

தஞ்சாவூர்: "மழையளவு குறைந்து கொண்டே வருவதால், கடலில் மீன் இன பெருக்கம் குறைந்து கொண்டே வருகிறது," என, தமிழ்நாடு மீன் பல்கலைக்கழக துணைவேந்தர் பாஸ்கரன் மணிமாறன் பேசினார்.

தஞ்சையில், தமிழ்நாடு மீன் பல்கலைக் கழகம் மற்றும் மத்திய நன்னீர் உயிரன வளர்ப்பு சார்பில், சினைமீன் பராமரிப்பு மற்றும் தரமான மீன் குஞ்சுகள் உற்பத்தி குறித்த கருத்தரங்கம் நடந்தது. மத்திய நன்னீர் உயிரன வளர்ப்பு இயக்குனர் ஜெயசங்கர், மீன்வளர்ப்பு குறித்து விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தார்.

தமிழ்நாடு மீன் பல்கலைக்கழக துணைவேந்தர் பாஸ்கரன் மணிமாறன் பேசியதாவது: தமிழகத்தில், ஆண்டுக்கு சராசரியாக, 4.5 லட்சம் டன் மீன் உற்பத்தி செய்யலாம். ஆனால், இன்றோ, 0.87 லட்சம் டன் மீன் உற்பத்தி தான் செய்யப்படுகிறது. இதற்கு காரணம் மழையளவு குறைவாக

இருப்பது தான், இதனால், கடலிலும் மீன் இன பெருக்கம் குறைந்து கொண்டே வருகிறது. இதனால் தான், மத்திய, மாநில அரசுகள் உள்நாட்டு மீன்வகைகளை பெருக்க பல்வேறு திட்டங்களை கொண்டு வந்துள்ளன. அந்த வகையில், உள்நாட்டில் நன்னீர் மீன் வளர்ப்பு மூலம் மீன் குஞ்சுகளை பெருக்கி, மீன் இனத்தை பெருக்க முடியும். இதற்கு, சிறந்த முறையில், மீன் குஞ்சுகளை விவசாயிகள் தேர்ந்தெடுத்து வளர்க்க வேண்டும். வேளாண், பால் புராட்சி போன்று, மீன் புரட்சி ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

## மழை இன்றி மானாவரி விளைச்சல் பாதிப்பு

நத்தம் : நத்தம் பகுதியில் மழை தொடராததால் மானாவரியாக சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களின் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியை சேர்ந்த ஆவிச்சிபட்டி, சிறுகுடி, குட்டுப்பட்டி, மேலமேட்டுப்பட்டி, மூங்கில்பட்டி, செல்லப்பநாயக்கன்பட்டி, கோவில்படடி உள்ளிட்ட பகுதிகளில் பாசிப்பயிர், உழுந்து, தட்டைப்பயிர், எள், கடலை, மொச்சை உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்துள்ளனர். கடந்த மாதத்தில் இப்பகுதிகளில் அவ்வப்போது சாரல் மழை பெய்ததால், பயிர்கள் நன்றாக செழித்து வளர்ந்தன. தற்போது அறுவடை செய்யும் பருவத்தில் உள்ளது. இந்நிலையில் கடந்த சில நாட்களாக இப்பகுதிகளில் மழைப்பொழிவு குறைந்தது. இதனால் போதிய நீர்ச்சத்து இல்லாமல் விளைச்சல் பாதிக்கும் நிலை உள்ளது. கோவில்பட்டியை சேர்ந்த விவசாயி மாரி கூறியதாவது,""ஒரு ஏக்கரில் தட்டைப்பயிர் சாகுபடி செய்துள்ளேன். உரிய நேரத்தில் மழை இல்லாமல் காய் பிடிக்கவில்லை. விளைச்சல் இல்லததால் மாடுகளை விட்டு மேய்க்கிறோம். அரசு நிவாரணம் வழங்க முன்வர வேண்டும்' என்றார்

## தக்காளி சாகுபடியில் நஷ்டம் தவிர்க்க குழித்தட்டு தொழில்நுட்பம் அறிமுகம்




திண்டுக்கல் : ""இளைஞர்கள் குழிதட்டு தொழில்நுட்பத்தில் காய்கறி செடிகள் வளர்த்து, விற்பனை செய்யும் நர்சரி துவங்கலாம்", என தோட்டக்கலைத்துறை பரிந்துரைத்துள்ளது.

திண்டுக்கல் ரெட்டியார்சத்திரம் காய்கறி மகத்துவ மையத்தில் குழிதட்டு (ப்ரோ ட்ரே) தொழில்நுட்பத்தில் காய்கறி நாற்றுக்கள் உற்பத்தியாகிறது. இம்முறையில் தென்னை நார் கழிவுகள் 1.25 கிலோ, நுண்ணுயிர் ஊக்கிகள் 200 கிராம் சேர்க்க வேண்டும். அதை குழிகளை கொண்ட பிளாஸ்டிக் தட்டில், ஒவ்வொரு குழியிலும் 98 தக்காளி விதைகளை விதைக்க வேண்டும்.

நட்ட 25 முதல் 30 நாட்களில் தக்காளி செடி நன்கு வேர் விட்டு வளரும். இந்த தொழில்நுட்பத்தால் சாதாரண நாற்றாங்கால் முறை வளர்ப்பில் ஏற்படும் விதை சேதாரம் இருக்காது. இதனால் வேர்களில் நுண்ணூட்டச் சத்துக்கள் அதிகரிக்கும். விவசாயிகள் விளைநிலத்தில் நாற்றுக்களை நடும்போது பாதிப்பு ஏற்படுவதில்லை. எனவே, தக்காளி மற்றும் காய்கறி சாகுபடியில் "ப்ரோ ட்ரே' தொழில்நுட்ப நாற்றுக்களை விவசாயிகளுக்கு வழங்க தோட்டக்கலைத்துறை முடிவு செய்தது.தொழில் துவங்கலாம்: வேலையில்லா இளைஞர்கள் இந்த தொழில் நுட்பத்தில் காய்கறி

பயிர்களுக்கான நாற்றங்கால் அமைக்கலாம். வளமான, காய்கறி செடிகளை விவசாயிகளுக்கு விற்று வருமானம் ஈட்டலாம். ஏக்கருக்கு ரூ.4 ஆயிரம் நடவுச் செலவு, ரூ. 6 ஆயிரம் தொழில்நுட்பச் செலவு ஆகும். எனவும் தோட்டக்கலைத்துறை பரிந்துரைத்துள்ளது.

திண்டுக்கல் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் கணேசன் கூறியதாவது: வேலையில்லா இளைஞர்களுக்கு இது சரியான வாய்ப்பு. தனியாக "ப்ரோ ட்ரே' தொழில்நுட்பத்தில் காய்கறி செடிகளை வளர்த்து விற்பனை செய்யலாம். 25 சென்டில் ஓராண்டில் 20லட்சம் நாற்று உற்பத்தி செய்யலாம். ஒரு நாற்றை 80 காசு முதல் 1.50 வரை விற்கலாம். இதன் மூலம் ரூ.5 முதல் 6 லட்சம் வருவாய் பெறலாம். இதில் 30 சதவீதம் உற்பத்தி செலவு இருக்கும். தற்போது தக்காளி, மிளகாய், கத்தரி மற்றும் முட்டைக்கோஸ் உற்பத்திக்கு உதவுகிறோம். நர்சரி துவங்க விரும்பும் இளைஞர்கள், திண்டுக்கல் துணை இயக்குனர் அலுவலகத்தில் விபரங்களை பெறலாம், என்றார்.

### மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்திக்கு ரூ.3.66 கோடி

திண்டுக்கல் : மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டத்தில் திண்டுக்கல் மாவட்டத்திற்கு ரூ.3.66 கோடியை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.

தமிழகத்தில் திண்டுக்கல், நெல்லை, விருதுநகர், தேனி, கோவை உள்ளிட்ட 8 மாவட்டங்களில் மேற்குத்தொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தில் திண்டுக்கல் மாவட்டத்திற்கு 2014-15 க்கு ரூ.3.66 கோடியை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. இதில் வேளாண்மை பொறியியல் துறைக்கு ரூ.1.21 கோடி, வேளாண்மைக்கு ரூ.4.95 லட்சம், தோட்டக்கலைக்கு ரூ.13.39 லட்சம், பேரூராட்சிக்கு ரூ.19 லட்சம், ஆதிதிராவிடர் நலத்துறைக்கு ரூ.16

லட்சம், வனத்திற்கு ரூ.61 லட்சம், பழங்குடியினர் நலத்துறைக்கு ரூ.1.09 கோடி, கால்நடை பராமரிப்புக்கு ரூ.12.55 லட்சம், மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைக்கு ரூ.8.26 லட்சம் என, ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தடுப்பணைகள், யானை தடுப்பு அகழிகள், தீத்தடுப்பு, ஒருங்கிணைந்த பண்ணைத்திட்டம், விவசாயிகளுக்கு நாற்று வழங்கல், பழங்குடியினர் மேம்பாடு, வேலி, "சோலார்' வசதி போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### பருவம் மாறி வீசும் காற்றால் கிணறுகளில் நீர் மட்டம் சரிவு

ஒட்டன்சத்திரம் : ஒட்டன்சத்திரத்தில் சுட்டெரிக்கும் வெயிலுடன், பலத்த காற்றும் வீசுவதால் கிணறுகளில் நீர்மட்டம் மள மள வென சரிந்து வருகிறது. இதனால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றி உள்ள கிராமப்பகுதிகளில் வழக்கமாக ஆடி மாதம் பலத்த காற்று வீசுவது வழக்கம். இந்த ஆண்டு புரட்டாசி பிறந்த பின்பும் தற்போது வறண்ட காற்று பலமாக வீசி வருகிறது. கோடையை நினைவு படுத்தும் வகையில் வெப்பத்தின் தாக்கம் அதிகமாக உள்ளது. வழக்கமாக பெய்ய வேண்டிய மழையும் பெய்யவில்லை. இந்த காரணங்களால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருகிறது. அதற்கேற்ப கிணறுகள் மற்றும் போர்வெல்களில் நீர் மட்டம் மள மள வென்று குறையத் தொடங்கி உள்ளது. ஒட்டன்சத்திரம் பகுதிகளில் உள்ள கிராமங்களின் குடிநீர் ஆதாரம் போர்வெல்கள் மற்றும் கிணறுகள்தான். இவற்றில் தற்போது நீர் இருப்பு குறைந்து வருகிறது. மழை பெய்தாலன்றி, விரைவில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் வாய்ப்பு உள்ளது. பரப்பலாறு அணையில் போதுமான அளவிற்கு நீர் இருப்பு உள்ளதால், ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு குறைவாக உள்ளது.

### பழநியில் நீரின்றி வறண்டது பாலாறு பொருந்தலாறு அணை




பழநி : மலைப்பகுதியில் மழைஇல்லாததால் பழநி குடிநீர் ஆதாரமான பாலாறு-பொருந்தலாறு அணை தண்ணீர் வரத்துஇல்லாமல் 24 அடியாக (மொத்தம்உயரம் 65அடி) குறைந்துள்ளது.

பழநிநகர்,கிராமப்புற குடிநீர், விவசாய ஆதாரமாக பாலாறு-பொருந்தலாறு அணைகள் உள்ளன. கொடைக்கானல் மலைப்பகுதியில் மழைபெய்தால் இந்த அணை நிரம்புகிறது. கடந்த சில மாதங்களாக போதிய மழையில்லாமல் அணையின் நீர்மட்டம் குறைந்துள்ளது. தண்ணீர் வரத்து இல்லாமல், அணை புனரமைப்பு பணிகளுக்காக வினாடிக்கு 28 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுவதால் குறைந்த பட்ச ஈரப்பதமும் இன்றி நீர்ப்பிடிப்பு தரைத்தளங்கள் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. தற்போது பழநி நகருக்கு பாலாறு-பொருந்தலாறு அணை தண்ணீர் பெயரளவில் தான் வருகிறது. மழைஇல்லாததால் விவசாயப்பணி, குடிநீருக்கு கடும் தட்டுபாடு ஏற்படும் அபாயம் உள்ளது. ஆகையால் வழக்கமான 5 கனஅடி தண்ணீரை மட்டும் வெளியேற்ற பொதுபணித்துறையினர் முன்வர வேண்டும் என மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

**மானாவாரி நிலங்களில் கருகி வரும் மக்காச் சோளம்**

ஒட்டன்சத்திரம் : ஒட்டன்சத்திரத்தின் பல்வேறு இடங்களில் மழை பெய்யாமல் போனதால், மானாவாரி நிலங்களில் விதைத்த மக்காச் சோளம் முளைத்தும், முளைக்காமலும் கருகி வருவதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு மஞ்சநாயக்கன்பட்டி, போடுவார்பட்டி,பொருளூர், காளிப்பட்டி மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் சிறிதளவு மழை பெய்தது. இதனால் ஏற்பட்ட ஈரத்தை பயன்படுத்தி விவசாயிகள் மானாவாரி நிலங்களில் மக்காச்சோளத்தை விதைத்தனர். சில நாள் இடைவெளியில் மழை பெய்தால் கூட மக்காச்சோளம் வளர்ந்து விடும் என்று நம்பி விதைத்த விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அவர்கள் எதிர்பார்த்தபடி மழை பெய்யாமல் போனது. மழை பெய்வதற்கான அறிகுறியே இல்லாமல் பலத்த காற்றுடன் வெயிலும் அடிப்பதால் நிலம் வறண்டு விட்டது. இதன் காரணமாக மக்காச்சோளப் பயிர்க்கு தேவையான ஈரப்பதம் கிடைக்காமல் கருகிவிட்டன. செம்மடைப்பட்டி பகுதியில் மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் சில நாட்களுக்கு முன்பு வறண்ட நிலத்தில் மக்காச் சோளம் விதைக்கப்பட்டது. அப்பகுதியிலும் மழை இல்லாததால் விதை முளைக்காமல் நிலத்திற்குள்ளேயே கருகிப் போனது. மழைபெய்யாமல் போனதால், மானாவாரி நிலங்களில் நடப்பட்ட மக்காச்சோளம் முளைத்தும், முளைக்காமலும் கருகி போனதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## வறட்சி பாதிப்பு காரணமாக கால்நடை தீவன தட்டுப்பாடு

ஆண்டிபட்டி : ஆண்டிபட்டி பகுதியில் வறட்சி பாதிப்பால், கால்நடைகள் தீவனத்திற்காக திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆண்டிபட்டி பகுதியில் பல்வேறு கிராமங்கள் மானாவாரி மற்றும் இறவை பாசனத்தை மட்டுமே நம்பி உள்ளன. தொழில் துறைக்கு

வாய்ப்பில்லாததால் விவசாயிகள் பலரும் விவசாயம், கால்நடை வளர்ப்பை மட்டுமே கட்டாயம் மேற்கொள்ள வேண்டி உள்ளது. சில ஆண்டுகளாக இப்பகுதியில் தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை போதுமான அளவு இல்லை. பல ஆண்டுகளாக நிரம்பாத குளங்கள், கண்மாய்களால் விவசாயிகளுக்கு எந்த பலனும் இல்லை. இதனால் ஆண்டிபட்டி பகுதியில் நிலத்தடி நீர் வற்றி விட்டது. பல ஆண்டுகளாக மழை கைகொடுக்காததால் மானாவாரி நிலங்களில் விளைச்சல் இல்லை. ஓரளவு நீர் சத்துள்ள இறவை பாசன நிலங்களில் காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகிறது. மானாவாரி நிலங்களில் விளையும் தானிய பயிர்களை அறுவடைக்குப்பின் தீவனமாக பயன்படுத்திக்கொள்வர். சில ஆண்டுகளாக விளைச்சல் கை கொடுக்காததால் தீவனங்களை இருப்பில் வைக்க முடியவில்லை.

அவ்வப்போது தேவைக்கு வெளியூர்களில் இருந்து கொண்டு வந்தால் கூடுதல் செலவாகிறது. கடந்த ஆண்டு கோடையில் பெய்த மழையால் தீவனத்திற்கான தட்டுப்பாடு தற்காலிகமாக சரியானது. தற்போது வறட்சி மீண்டும் அதிகரித்துள்ளது. வெளியிடங்களிலும் தீவனத்திற்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் கூடுதல் விலை கொடுத்தாலும் தீவனங்களை கொண்டுவர முடிவதில்லை. கன்னியப்பபிள்ளைபட்டி, கொத்தப்பட்டி, கோத்தலூத்து, கதிர்நரசிங்கபுரம், ராஜதானி, தெப்பம்பட்டி, அனுப்பபட்டி, ஏத்தக்கோவில், போடிதாசன்பட்டி உட்பட பல கிராமங்களில் வளர்க்கப்படும் கால்நடைகளை மேய்ச்சலுக்காக பல கி.மீ.,தூரம் கொண்டு சென்று அவதிப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. பசுந்தீவனம் இல்லாததால் பால்மாடுகள் பாதிப்புக்குள்ளாகின்றன. விவசாயிகளுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. தொடர்ந்து பராமரிக்க முடியாத விவசாயிகள் தங்கள் கால்நடைகளை விற்று வருகின்றனர்.

விவசாயிகள் சிலர் கூறியதாவது: ஆண்டிபட்டி பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் வறட்சியை தாக்குப்பிடித்து வந்தாலும், இந்த ஆண்டு பாதிப்பு

அதிக அளவில் உள்ளது. தேனி மாவட்டத்தில் மற்ற பகுதிகளில் பெய்த மழை ஆண்டிபட்டி பகுதியில் பெய்யவில்லை. ஆண்டிபட்டி பகுதியில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி, தீவனத்தட்டுப்பாடு விவசாயிகளுக்கு பெரும் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தமிழகம், புதுச்சேரியில் மழைக்கு வாய்ப்பு**

தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஆங்காங்கே மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது: வெப்பசலனம் காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் பரவலாக மழை பதிவாகி வருகிறது. குறிப்பாக, ஓரிரு மாவட்டங்களில் இடியுடன் கூடிய பலத்த மழை பதிவாகியது.

கடந்த 24 மணி நேரத்தில் தமிழகம், புதுச்சேரியில் எந்தவொரு மாவட்டத்திலும் மழை பதிவாகவில்லை.பலத்த மழைக்கு வாய்ப்பு:

வட கடலோர தமிழகத்தில் தென்மேற்குப் பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இதன் காரணமாக, வியாழக்கிழமை (செப்.24), வெள்ளிக்கிழமை (செப்.25) பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது.

அதாவது வேலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கோவை, ஈரோடு, கரூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், சிவகங்கை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், மதுரை ஆகிய தமிழகத்தின் உள் மாவட்டங்களில் பலத்த மழை பெய்யும்.

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சை, திருவாரூர், நாகை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய தமிழகத்தின் கடலோர மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் ஆங்காங்கே மழை பெய்யும்.

புதன்கிழமையன்று ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும்.

மாலை அல்லது இரவு நேரங்களில், நகரின் ஒரு சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும். நகரின் அதிகபட்ச வெப்பநிலை 97 டிகிரியாக இருக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## எல்லை தாண்டும் மீனவர்களைத் தாக்கக் கூடாது: இந்திய - இலங்கை உயரதிகாரிகள் கூட்டத்தில் முடிவு



இந்திய - இலங்கை கடல் எல்லையைத் தாண்டி மீன்பிடிக்க வரும் இரு தரப்பு மீனவர்களை இருநாட்டு கடற்படையோ, கடலோரக் காவல் படையோ தாக்கக் கூடாது என்று தில்லியில் நடைபெற்ற இரு நாடுகளின் பாதுகாப்புத் துறைச் செயலர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

"இந்திய - இலங்கை பாதுகாப்பு பேச்சுவார்த்தை' எனும் பெயரில் இரு நாடுகளின் பாதுகாப்புத் துறைச் செயலர்கள், முப்படைகளின் தளபதிகள், கடலோரக் காவல் படை உயரதிகாரிகள் பங்கேற்ற உயர்நிலைக் குழுக் கூட்டம் தில்லியில் திங்கள், செவ்வாய் ஆகிய இரு நாள்கள் நடைபெற்றது.

முதல் நாள் கூட்டத்தில் இரு நாடுகளிடையிலான ராணுவ ஒத்துழைப்பு, ஆயுதங்கள் கொள்முதல், பயிற்சியை விரிவுபடுத்துதல் ஆகியவை தொடர்பாக அதிகாரிகள் குழு ஆலோசனை நடத்தியது. இதில், இலங்கை முப்படையினருக்கு இந்திய ராணுவக் கல்லூரிகளில் இடங்களை அதிகரிப்பது, நவீன ஆயுதங்கள் பயிற்சி அளிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இரண்டாம் நாள் கூட்டம்: இதைத் தொடர்ந்து, செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இரண்டாம் நாள் கூட்டத்தில் இந்தியப் பெருங்கடல் பகுதியில் பாதுகாப்பு, அமைதி நிலவ இரு நாடுகளின் பாதுகாப்புப் படைகளும் இணைந்து ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.

இதில் பங்கேற்ற இந்திய கடலோரக் காவல் படை அதிகாரிகள், இந்திய கடல் எல்லையைத் தாண்டும் தமிழக மீனவர்கள் உள்ளிட்டோர் மீது இலங்கை கடற்படை, கடலோரக் காவல் படை வீரர்கள் நடத்தும் தாக்குதல்கள் குறித்து பிரச்னை எழுப்பினர். அப்போது, கடல்சார் வளங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை கடலோரக் காவல் படை ஏற்றிருப்பதால், இலங்கை கடல் எல்லைக்குள் நுழையும் மீனவர்களை விரட்டி அடிக்க சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும், மீனவர் பிரச்னையை மனிதாபிமானத்துடன் அணுகும்படி தங்கள் நாட்டுப் பாதுகாப்புத் துறை உத்தரவிட்டுள்ளதாகவும் அந்நாட்டு கடலோரக் காவல் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

செயலர்கள் ஆலோசனை: இதைத் தொடர்ந்து, இந்திய பாதுகாப்புத் துறைச் செயலர் ஜி. மோகன் குமார், இலங்கை பாதுகாப்புத் துறைச் செயலர் கருணசேனா ஹெட்டியராச்சி ஆகிய இருவரும் தனியாகப் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில், மீனவர்கள் பிரச்னை குறித்து விரிவாக விவாதித்தனர்.

பேச்சுவார்த்தை குறித்து இலங்கை பாதுகாப்புத் துறை உயரதிகாரி கூறியதாவது:

மீனவர்கள் விவகாரத்தை, வாழ்வாதாரப் பிரச்னையாக அணுகி மனிதாபிமானத்துடன் அவர்களை நடத்தும்படி இரு தரப்பு கடலோர காவல் படைகளும் பரஸ்பரம் கேட்டுக் கொள்ளப்பட்டன. இதைத் தொடர்ந்து, கடல் எல்லையைத் தாண்டும் மீனவர்களை எக்காரணத்தைக் கொண்டும் தாக்கக் கூடாது. அவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்வதைத் தவிர்க்க இரு தரப்பிலும் முடிவெடுக்கப்பட்டது.

ஆனால், இரு நாட்டு கடலோரப் பகுதிகளில் மீனவர்கள் பிடிபட்டால் அவர்கள் மீது அந்தந்த நாட்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம்.

அதுவும் இரு நாட்டு அரசுகளின் அரசியல் முடிவுகளுக்கு உள்பட்டது என்றும் அதிகாரிகளிடம் பாதுகாப்புத் துறைச் செயலர்கள் விளக்கினர்.

இலங்கை கடலோரக் காவல் படைக்கு கூடுதலாக கண்காணிப்புப்

படகுகளை வழங்கும் திட்டத்தை விரைவுப்படுத்துதல், கடல் எல்லை தொடர்பாக ஏற்படும் குழப்பங்களைக் களைய அவ்வப்போது கடலோரக் காவல் கண்காணிப்பில் ஈடுபடும் இலங்கைக் கடற்படை வீரர்களுக்கு இந்தியக் கடற்படை மூலம் பயிற்சி அளித்தல் ஆகிய நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது என்று இலங்கை பாதுகாப்புத் துறை உயரதிகாரி தெரிவித்தார்.

## சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருக்க பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம்: அமைச்சர் தினேஷ்குண்டுராவ்

சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருக்க பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று கர்நாடக உணவு, பொதுவழங்கல்துறை அமைச்சர் தினேஷ்குண்டுராவ் தெரிவித்தார்.

பெங்களூரு சிட்டி ரயில் நிலையத்தை சுத்தகரிக்கும் நிகழ்ச்சிக்கு கர்நாடக தொழில் வர்த்தகசபை கூட்டமைப்பினர் ஏற்பாடு செய்திருந்தனர். இதில் கலந்து கொண்டு அவர் பேசியது: நாட்டை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டுமென மகாத்மா காந்தி வலியுறுத்தினார். அவரின் கனவுகளை நிறைவேற்றும் விதமாக தற்போது தேசிய அளவில் தூய்மையாக்கும் திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது. அதில் மாநில அரசுக்கு உடன்பாடு உள்ளது. எனவே ரயில்நிலையத்தில் உள்ள அசுத்தத்தை தூய்மையாக்கும் பணியில் பங்கு கொண்டேன். பொதுமக்கள் தங்களை சுற்றியுள்ள இடங்களை சுத்தமாக்கினால் மட்டும் போதாது. அங்கெல்லாம் செடி,கொடி மரங்களை நடவேண்டும். சுற்றசூழலை மாசுபடுத்துவதில்லை என்று உறுதி ஏற்க வேண்டும். சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருக்க பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம். அதில் மாணவர்களின் பங்களிப்பு அதிகமாக இருக்க வேண்டும் என்றார் அவர். நிகழ்ச்சியில் தொழில் வர்த்தகசபை கூட்டமைப்பின் தலைவர் தல்லம் துவாரகநாத், தென்மேற்கு ரயில்வே

மண்டல மேலாளர் சஞ்சீவ்குமார் அகர்வால் உள்ளிட்டோர் பங்கு கொண்டனர்.

**மல்லிகை விலை குறைவு**

காரியாபட்டி பகுதியில் மல்லிகைப் பூ விலை கிலோ ரூ.80 ஆக குறைந்தது.காரியாபட்டி பகுதியில் நந்திக்குண்டி, தோப்பூர், வரலொட்டி, பி.புதுப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் மல்லிகை சாகுபடி செய்யப்படுகிறது. இருவாரங்களுக்கு முன் பூக்கள் கிலோ ரூ.200க்கு விற்றது. தற்போது மல்லிகை விளைச்சல் அதிகரித்துள்ளது. ஆனால், முகூர்த்த நாள்கள் இல்லாததால் விற்பனை குறைந்துள்ளது. இதனால் கிலோ ரூ.80க்கே விலைபோகிறது. வியாபாரி கந்தசாமி கூறும்போது, மழை பெய்யத் தொடங்கினால் பூக்களின் விலை மீண்டும் உயரும் என்றார்.

**கடும் வறட்சியால் தீவனத்துக்கு திண்டாடும் கால்நடைகள்; பரிதவிக்கும் விவசாயிகள்**

நாமக்கல் மாவட்டத்தில் கடும் வறட்சியால் கால்நடைகள் தீவனத்துக்காக திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் 75 சதவித கிராமங்கள் மானாவாரி மற்றும் இறவை பாசனத்தை மட்டுமே நம்பி உள்ளன. இதனால், விவசாயம், கால்நடை வளர்ப்பை கட்டாயம் மேற்கொள்ள வேண்டி உள்ளது. சில ஆண்டுகளாக இப்பகுதியில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை போதுமான அளவு பெய்யாததால், மானாவாரி நிலங்களில் விளைச்சல் இல்லை. ஓரளவு நீர் சத்துள்ள இறவை பாசன நிலங்களில் காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகின்றன.மானாவாரி நிலங்களில் விளையும் தானியப் பயிர்களை அறுவடைக்குப்பின் தீவனமாக பயன்படுத்திக்கொள்வர். சில ஆண்டுகளாக விளைச்சல் கை கொடுக்காததால் தீவனங்களை இருப்பில் வைக்க முடியவில்லை. கடந்த ஆண்டு கோடையில் பெய்த மழையால்

தீவனத்துக்கான தட்டுப்பாடு தாற்காலிகமாக சமாளிக்கப்பட்டது.தற்போது வறட்சி மீண்டும் அதிகரித்துள்ளதால், வெளியிடங்களிலும் தீவனத்துக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால், கூடுதல் விலை கொடுத்தாலும் தீவனங்கள் கிடைப்பதில்லை.

பசுந்தீவனம் இல்லாததால், பால் மாடுகள் பாதிப்புக்குள்ளாகின்றன. இதனால், விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டு, கால்நடைகளை பராமரிக்க முடியாமல் விற்று வருகின்றனர்.நாமக்கல், ராசிபுரம் வட்டங்களில் ஒவ்வொரு ஆண்டும் வறட்சியைத் தாக்குப்பிடித்து வந்தாலும், இந்த ஆண்டு வறட்சியின் பாதிப்பு அதிக அளவில் உள்ளதால் ஏற்பட்ட தீவனத்தட்டுப்பாடு, விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பிலும் சவாலை ஏற்படுத்தியுள்ளது.

**நாமகிரிப்பேட்டையில் ரூ.42 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்**

நாமகிரிப்பேட்டை வேளாண்மை கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மஞ்சள் ஏலத்தில் 850 மூட்டைகள் ரூ.42 லட்சத்துக்கு ஏலம் போயின.

இந்த ஏலத்தில், தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா, சேலம், ஆத்தூர், தலைவாசல் மற்றும் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இதில், தலா 65 கிலோ கொண்ட 850 மூட்டைகள் ஏலத்தில் வைக்கப்பட்டன.

இதில், விரலி ரகம் ஒரு குவிண்டாலுக்கு அதிகபட்சமாக ரூ.9,799-க்கும், குறைந்தபட்சமாக ரூ.7,219-க்கும், உருண்டை ரகம் ஒரு குவிண்டாலுக்கு அதிகபட்சமாக ரூ.7,959-க்கும், குறைந்தபட்சமாக ரூ.6,224-க்கும்,

பனங்காலி ரகம் ஒரு குவிண்டாலுக்கு அதிகபட்சமாக ரூ.13,800-க்கும், குறைந்தபட்சமாக ரூ.7,600-க்கும் ஏலம் போனது.

மொத்தம் ரூ.42 லட்சத்துக்கு மஞ்சள் வர்த்தகம் நடைபெற்றது.

**கோழிகளுக்கு வெப்பம் குறைந்த நேரங்களில் தீவனமிட அறிவுறுத்தல்**

கோழிகளுக்கு வெப்பம் குறைந்த நேரங்களில் தீவனமிட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட செய்தி: அடுத்த 3 நாள்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் லேசான மழை இருக்கும்.

தென்மேற்கு பருவ மழையின் இறுதிக் கட்டத்தில் இருந்தாலும், அதன் தாக்கம் சற்றே அதிகரித்து மேகமூட்டத்துடன் காணப்படும்.

கோழிகளில் வெப்ப அயற்சி காணப்படும். தீவன எடுப்பும் இயல்பைவிட குறையக் கூடும். இதனால், அடுத்த பருவ மழைக்காலம் தொடங்கும் வரை, தீவனத்தில் முட்டை உடைவதைக் குறைக்க சோடா உப்பினை டன்னுக்கு 2 கிலோ வரை சேர்க்க வேண்டும். தீவன எடுப்பைத் தூண்டும் வகையில் வெப்பம் குறைந்த நேரங்களில் தீவனமிடுவதும் சிறந்தது.

**கர்நாடக அணைகளில் தண்ணீர் திறப்பு: மேட்டூர் அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பு**

கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ள நிலையில், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு 6,197 கன அடியாக அதிகரித்துள்ளது.

கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளில் இருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. மேலும் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளான சாம்ராஜ் நகர், கொள்ளேகால் உள்ளிட்ட இடங்களில் மழை பெய்து வருவதால், ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

ஒகேனக்கல் காவிரியில் செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி 10,200 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. இதனால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. அந்தவகையில் மேட்டூர் அணைக்கு திங்கள்கிழமை 1,114 கன அடி நீர் வந்து கொண்டிருந்த நிலையில், தற்போது செவ்வாய்க்கிழமை  காலை நிலவரப்படி 6,197 கன அடியாக நீர் வரத்து அதிகரித்துள்ளது.

அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனம் மற்றும் கிழ்ககு, மேற்கு கால்வாய் பாசனத்திற்கென மொத்தம் வினாடிக்கு 13,800 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.நீர் வரத்து அதிகரித்துள்ள போதிலும் அணையில் இருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு அதிகமாக உள்ளது. இதனால் அணையின் நீர் மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. அணையின் நீர் மட்டம் 68.16 அடியாக உள்ளது. நீர் இருப்பு 31.14 டி.எம்.சி.யாக உள்ளது. தற்போது கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டு, நீர் வரத்து அதிரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## 25 இல் மாதாந்திர விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

சேலம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் செப்டம்பர் 25 ஆம் தேதி நடைபெற உள்ளது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் (முதல் தள) கூட்டரங்கில் செப்.25 ஆம் தேதி காலை 10.15 மணிக்கு ஆட்சியர் வா.சம்பத் தலைமையில் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு வேளாண்மை தொடர்பான தங்கள் குறைகளை நேரிலும், விண்ணப்பம் மூலமாகவும் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் அலுவலகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஒகேனக்கல் அருவிக்கு நீர் வரத்து அதிகரிப்பு**

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் அருவிக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் கடந்த சில நாள்களாக நீர் வரத்து வெகுவாக குறைந்த காணப்பட்டது. இதனால், அருவிக்கு நொடிக்கு 1500 முதல் 2000 கன அடி தண்ணீர் மட்டுமே வந்தது.

இந்த நிலையில், தற்போது, கர்நாடக மாநிலம், கிருஷ்ணராஜ சாகர், கபிணி ஆகிய அணைகளிலிருந்து காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இந்த தண்ணீர் திங்கள்மாலை ஒகேனக்கல் அருவிக்கு வந்துக்கொண்டிருக்கிறது.

இதனால், அருவிக்கு நீர் வரத்து சற்று அதிகரித்து செவ்வாய்க்கிழமை மாலை நிலவரப்படி நொடிக்கு

**பூச்சிகளைக் கட்டுப்படுத்த நவீன விளக்குப் பொறிகள்**

காட்பாடி சேவூரில் உள்ள இந்திய உணவுக் கழகக் கிடங்கில் சேமித்து வைக்கப்பட்டுள்ள உணவுப் பொருள்களை நாசம் செய்யும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த நவீன விளக்குப் பொறிகள் அமைக்கப்பட்டன.

இந்த புற ஊதா கதிர் விளக்குப் பொறிகள் அரக்கோணத்தில் உள்ள இந்திய உணவுக் கழக கிடங்கிலும் நிறுவப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெளியிடங்களில் இருந்து ரயில்கள் மூலம் கொண்டு வரப்படும் நெல், அரிசி, கோதுமை, சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்கள் சேவூரில் உள்ள இந்திய உணவுக் கழகக் கிடங்கில் சேமித்து வைக்கப்படுகின்றன. இங்கிருந்து தேவைக்கேற்ப அனைத்துப் பகுதிகளுக்கும் பிரித்து அனுப்பப்பட்டு வருகின்றன.

இதுபோன்ற உணவுப் பொருள் கிடங்குகளில் தானிய மூட்டைகளை நாசம் செய்யும் டைபோலீயா என்ற பூச்சிகள், வண்டுகள் அதிகம் இருப்பதுண்டு. இவை அருகில் உள்ள குடியிருப்புகளுக்குப் பரவி உணவுப் பொருள்கள், குடிநீர் பாத்திரங்கள் உள்ளிட்டவற்றில் விழுந்து பாதிப்பை ஏற்படுத்துவதுண்டு.

இவற்றை கட்டுப்படுத்த அடிக்கடி கிடங்குகளில் பூச்சி மருந்துகளை தெளிப்பதுண்டு. இதில் ஒருசில இடர்பாடுகளை சேவூர் இந்திய உணவுக் கழகம் போன்றவை தொடர்ந்து சந்தித்து வந்தன.

இந்த நிலையில், இத்தகைய பூச்சிகளையும், வண்டுகளையும் புற ஊத கதிர்களை உமிழும் விளக்கு பொறிகள் மூலம் கட்டுப்படுத்தும் நவீன யுக்தியை கோவை வேளாண் பல்கலைக் கழகம் கண்டுபிடித்தது. ரூ.5 ஆயிரத்தில் கிடைக்கும் இந்த நவீன விளக்கு பொறிகளை உணவுப் பொருள் கிடங்குகள் மட்டுமின்றி விவசாயிகளும் பயன்படுத்த முடியும்.

புற ஊதா கதிர்களால் கவரப்படும் பூச்சிகள், வண்டுகள் விளக்கின் கீழ்பகுதியில் விழும்போது அதில் உள்ள ரசாயனக் கலவை காரணமாக இறந்து விடுகின்றன. உணவுப் பொருள்களுக்கும், சுற்றுச்சூழலுக்கும் பாதுகாப்பான இந்த விளக்குப் பொறிகள் சேவூரில் உள்ள 10

கிடங்குகளில் வைக்கப்பட்டன. அதேபோல், அரக்கோணத்தில் 11 கிடங்குகளில் வைக்கப்பட்டுள்ளன.

சேவூர் கிடங்குகளில் வைக்கப்பட்ட இந்த நவீன விளக்குப் பொறிகளின் செயல்பாடு குறித்து அருகில் உள்ள கிராம மக்களை திங்கள்கிழமை அழைத்து கிடங்கு மேலாளர் செந்தில்நாதன் விளக்கம் அளித்தார்.

## இயந்திர நெல் நடவு முறை: ஆட்சியர் ஆய்வு

வேளாண்மைத் துறை சார்பில், அத்திப்பட்டு கிராமத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையில் இயந்திரம் மூலம் நெல் பயிர் நடவு செய்யும் முறையை மாவட்ட ஆட்சியர் இரா.நந்தகோபால் செவ்வாய்க்கிழமை தொடக்கி வைத்துப் பார்வையிட்டார்.

காவேரிப்பாக்கம் ஒன்றியம், அத்திப்பட்டு கிராமத்தில் விவசாயி மனோகரின் நிலத்தில் சுமார் 3 ஏக்கரில் இந்த நடவு நடைபெற்றது. தொடர்ந்து, சிறுகரும்பூர் கிராமத்தில் குமாரவேல் பாண்டியன் விவசாய நிலத்தில் அமைக்கப்பட்டிருந்த சூரிய மின் சக்தியால் இயங்கும் மோட்டாரையும், அதே பகுதியில் தோட்டக் கலைத் துறை சார்பில் அமைக்கப்பட்ட பயிர்களையும் ஆட்சியர் பார்வையிட்டார்.

பின்னர், புதுப்பட்டு கிராமத்தில் ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்பு சார்பில் அமைக்கப்பட்டுள்ள பண்ணைக் குட்டையை பார்வையிட்ட அவர், செய்தியாளர்களிடம் கூறியதாவது:

வேலூர் மாவட்டத்தில் 31,700 ஹெக்டேரில் நெல் பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக, ஆற்காடு, வாலாஜாபேட்டை, சோளிங்கர், திமிரி, காவேரிப்பாக்கம், நெமிலி உள்ளிட்ட வட்டாரங்களில் அதிக அளவு நெல் பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு இயந்திர முறையில் நெல் பயிர் நடவு செய்வதை பிரபலப்படுத்துவதற்காக, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ஒரு ஹெக்டேருக்கு ரூ.3

ஆயிரம் பின்கொணர் மானியமாக வழங்கப்படுகிறது. இவ்வாறு 3,000 ஹெக்டர் பரப்பளவுக்கு மானியம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சூரிய ஒளியால் இயங்கும் மோட்டார்கள் மாவட்டத்தில் 17 இடங்களில் செயல்பட்டு வருகின்றன. வேலூர் மாவட்டத்தில் உள்ள படித்த, வேலையில்லா இளைஞர்களைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவர்களுக்கு நாற்று நடவு இயந்திரம் உள்ளிட்ட பல்வேறு விவசாயக் கருவிகள் வழங்கப்படுகின்றன. இதை இப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வாடகைக்கு விட்டு வருகின்றனர். இதனால், விவசாயிகளும், சுய உதவிக் குழுவினரும் பயன் பெறுகின்றனர். புதுப்பட்டு கிராமத்தைப் பொறுத்தவரை மானாவாரி பகுதியாகும். இந்தப் பகுதியில் 300 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு, ரூ.50 ஆயிரத்தில் ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்பு சார்பில் பண்ணைக் குட்டை அமைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இப்பகுதியில் நீராதாரம் உயர்ந்துள்ளது என்றார் ஆட்சியர்.

ஆய்வின்போது, வேளாண் இணை இயக்குநர் ஜெயசுந்தர், துணை இயக்குநர் வாசுதேவ ரெட்டி, செயல் அலுவலர் நெப்போலியன், அதிகாரிகள் ராமகிருஷ்ணன், அண்ணாதுரை, ஸ்டீபன் ஜெயக்குமார் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**சம்பா பயிரில் வரப்பு ஓரங்களில் உளுந்து விதைக்க மானியம்**

போளூர் வட்டாரத்தில் சம்பா பயிர் செய்யும் விவசாயிகள், வரப்பு ஓரங்களில் அரசு மானியத்தில் உளுந்து விதைத்து பயன்பெறலாம் என வேளாண்மை உதவி இயக்குநர் வடமலை தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் கூறியதாவது: போளூர் வட்டாரத்தில் களம்பூர், சந்தவாசல், கேளூர், ஜமுனாமரத்தூர் ஆகிய பகுதிகளி பருவமழைக்கு ஏற்ப விவசாயிகள் சம்பா பயிர் நடுவது வழக்கம்.

நிகழாண்டு சம்பா பயிர் நடும் விவசாயிகள், வரப்பு ஓரங்களில்

உளுந்து ரகங்களான வம்பன்-3, வம்பன்-4, டிஎம்வி-1, ஏடிடி-5 ஆகிய ரகங்களைப் பயிரிடலாம். ஒரு ஹெக்டேர் நெல் சாகுபடியில் உளுந்து ரக விதைகளை வரப்பில் விதைக்க தலா 3 கிலோவுக்கு ரூ. 100 மானியம் வழங்கப்படும். உளுந்து விதையை அந்தந்த வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகி பெற்றுக் கொள்ளலாம் என்றார் அவர் .

**கோமாரி நோய் தடுப்பூசி: விடுபட்ட கால்நடைகளுக்கு மீண்டும் வாய்ப்பு**

கோமாரி நோய்த் தடுப்பூசி போட்டுக் கொள்ள விடுபட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி போட மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கோபி கோட்டத்துக்கு உள்பட்ட பகுதிகளில் 2.40 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, செப்டெம்பர் 1-ஆம் தேதி முதல் முகாம் துவங்கி 21-ஆம் தேதியுடன் முடிவடைந்தது. இதுவரை 2,28,200 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

இதில், மீதமுள்ள மற்றும் விடுபட்ட கால்நடைகளுக்கு, கால்நடை வளர்ப்போர் அந்தந்த பகுதி கால்நடை மருந்தகங்களை அணுகி செப்டம்பர் 30-ஆம் தேதி வரை தடுப்பூசி போட்டுக்கொள்ளலாம் என கோபி கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் மணி சேகரன் தெரிவித்துள்ளார்.

**முருங்கை விலை உயர்வு**

புரட்டாசி மாதத்தையொட்டி, முருங்கைக்காயின் விலை உயர்ந்துள்ளது.

பல்லடம், பொங்கலூர் பகுதியில் பங்குனி, ஆடி மாதங்களில் முருங்கைக்காய் அதிகளவில் சாகுபடி செய்யப்படுவது வழக்கம். இந்த மாதங்களில் சந்தைக்கு அதிக அளவில் முருங்கைக்காய் வரத்து இருக்கும்.

இந்த ஆண்டும் ஆடி மாதத்தில் முருங்கைக்காய் வரத்து அதிகரிப்பால் குட்டை ரகம் ஒரு காய் 50 பைசாவுக்கும், நெட்டை ரகம் காய் ரூ.1-க்கும் விற்பனையானது. ஆவணியில் வரத்து குறைவால் குட்டை ரகம் ஒரு காய் ரூ.1-க்கும், நெட்டை ரகம் ரூ.2-க்கும் விற்பனையானது. தற்போது புரட்டாசி மாதம் துவங்கியுள்ளதால் முருங்கைக்காயின் தேவை அதிகரித்துள்ளதால் குட்டை ரகம் ஒரு காய் ரூ.2-க்கும், நெட்டை ரகம் ரூ.40க்கும் விற்பனையாகிறது.

## செப். 25-இல் விவசாயிகள் குறைதீர்க் கூட்டம்

மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் வெள்ளிக்கிழமை (செப்டம்பர் 25) திருப்பூரில் நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட அறிக்கை:

திருப்பூர் மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் வெள்ளிக்கழமை காலை 11 மணிக்கு, ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில், வேளாண் துறை, மின்வாரியம், பொதுப்பணித்துறை உள்ளிட்ட அனைத்துத் துறை அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர். இக்கூட்டத்தில் விவசாயிகள் பங்கேற்று தங்களது கோரிக்கைகளை தெரிவிக்கலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காண்டூர் கால்வாய் புதுப்பிக்கும் பணி நிறைவு: விவசாயிகள் மகிழ்ச்சி

பி.ஏ.பி., திட்டத்தின் உயிர்நாடியான காண்டூர் கால்வாய் புதுப்பிக்கும் பணிகள் நிறைவடைந்த நிலையில், பொதுப்பணித்துறை அதிகாரிகள், விவசாயிகள் கால்வாயை செவ்வாய்க்கிழமை பார்வையிட்டனர்.

பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட (பி.ஏ.பி.,) தொகுப்பு அணைகளிலிருந்து திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் கொண்டு செல்லப்படும் காண்டூர் கால்வாய் 49.3 கி.மீ., நீளமுடையது.

மரங்களின் வேர்கள் ஊடுருவியது உள்பட பல்வேறு காரணங்களால் கால்வாய் கரைகள் சேதமடைந்து 30 முதல் 40 சதவீதம் வரை தண்ணீர் விரயமானது. இதனால், பி.ஏ.பி., மண்டலப் பாசனத்தில் கடைமடை பகுதிகளுக்கு திருமூர்த்தி அணையில் இருந்து போதுமான தண்ணீர் வழங்க முடியாத நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து, விவசாயிகளின் பல ஆண்டு கோரிக்கைக்குப் பிறகு காண்டூர் கால்வாயை புதுப்பிக்க உலக வங்கி நிதியுதவியில் ரூ. 184.5 கோடி ஒதுக்கப்பட்டு, மூன்று பிரிவுகளாக பணிகள் நடைபெற்றன. ஆனால், திட்ட மதிப்பீட்டுக்கும் மேல் நிதி தேவைப்பட்டதால் திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு முதல்வரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. அதையடுத்து, கூடுதலாக ரூ. 37 கோடி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்றன. திட்டம் முழுமை பெற ரூ. 221.5 கோடி செலவாகியுள்ளது. திட்டத்தை முடிக்க 2011-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் 2013-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை 3 ஆண்டு காலம் அவகாசம் வழங்கப்பட்டது. முதல் கட்டமாக நடந்த பணியில் 2 கி.மீ., 350 மீட்டர் பணிகள் முடிக்கப்பட்டன. இரண்டாம், மூன்றாம் கட்டப்பணிகளை சேர்த்து 70 சதவீதம் பணிகள் முடிக்கப்பட்டன. நான்காம் கட்டமாக தற்போதுடன் பணிகள் நிறைவடைந்துள்ளன. நிர்ணயிக்கப்பட்ட கால அளவை விட ஓராண்டு காலம் அதிகம் ஆனதற்கு நிதி பற்றாக்குறை, காலநிலை, கால்வாயில் திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் வழங்குவது உள்பட பல காரணங்கள் கூறப்படுகின்றன.

இந்நிலையில், சுரங்கங்கள் உள்பட ஒரு சில இடங்களில் மட்டும் கால்வாயில் சிறிய பணிகள் செய்யவேண்டியுள்ளது. இதற்கு அரசு கூடுதல் நிதி ஒதுக்கவேண்டியுள்ளது.

இந்நிலையில், பணிகள் முழுமையடைந்த காண்டூர் கால்வாயை, பொதுப்பணித்துறை ஓய்வு பெற்ற தலைமைப்பொறியாளர் ரங்கநாதன், கண்காணிப்புப் பொறியாளர் இளங்கோவன், செயற்பொறியாளர் சுப்பிரமணியம், உதவி செயற்பொறியாளர் கருணாகரன், பி.ஏ.பி., திட்டக்குழுத் தலைவர் மெடிக்கல் பரமசிவம், ஆழியாறு திட்டக்குழுத் தலைவர் சின்னச்சாமி உள்பட பலர் செவ்வாய்க்கிழமை பார்வையிட்டனர்.

கண்காணிப்புப் பொறியாளர் இளங்கோவன் கூறுகையில், "கடந்த 2010-ஆம் 1,068 கன அடி தண்ணீர் காண்டூர் கால்வாயில் திறந்தபோது, திருமூர்த்தி அணைக்கு 630 கன அடி தண்ணீர் மட்டுமே சென்றது. ஆண்டுக்காண்டு, படிப்படியாக தண்ணீர் விரயம் குறைக்கப்பட்டு 2014-ல் 70 சதவீத பணிகள் முடிக்கப்பட்ட பிறகு 990 கன அடி திறக்கப்பட்டு 845 கன அடி சென்றடைந்தது. வரும் 25-ஆம் தேதி தண்ணீர் திறக்க உள்ளோம். இதில் தண்ணீர் விரயம் மேலும் குறையும் என எதிர்பார்க்கிறோம்' என்றார்.

**ஒகேனக்கல் அருவிக்கு நீர் வரத்து அதிகரிப்பு**

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் அருவிக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் கடந்த சில நாள்களாக நீர் வரத்து வெகுவாக குறைந்த காணப்பட்டது. இதனால், அருவிக்கு நொடிக்கு 1500 முதல் 2000 கன அடி தண்ணீர் மட்டுமே வந்தது.

இந்த நிலையில், தற்போது, கர்நாடக மாநிலம், கிருஷ்ணராஜ சாகர், கபிணி ஆகிய அணைகளிலிருந்து காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இந்த தண்ணீர் திங்கள்மாலை ஒகேனக்கல் அருவிக்கு வந்துக்கொண்டிருக்கிறது.

இதனால், அருவிக்கு நீர் வரத்து சற்று அதிகரித்து செவ்வாய்க்கிழமை மாலை நிலவரப்படி நொடிக்கு 10,500 கன அடி வந்துக்கொண்டிருக்கிறது.

### 3.29 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி

திருச்சி மாவட்டத்தில் நடைபெற்ற கோமாரி நோய்த் தடுப்பூசி செலுத்தும் முகாமில் 3.29 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் கோமாரி நோய்த் தடுப்பூசி செலுத்தும் முகாம் செப். 1-ம் தேதி தொடங்கி செப். 21-ம் தேதி வரை நடைபெற்றது. மாநகராட்சி மற்றும் 14 ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் மற்றும் 3 பேரூராட்சி பகுதிகளில் நடைபெற்ற இந்த முகாமில் 3.29 லட்சம் கால்நடைகளுக்குத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

இந்த முகாமில் தங்கள் கால்நடைகளை உள்படுத்தாத விவசாயிகள், அருகிலுள்ள கால்நடை மருத்துவமனை மற்றும் கால்நடை மருந்தங்களில் தங்கள் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி செலுத்திக்கொள்ளலாம் என ஆட்சியர் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

### திருவாரூரில் மழை

திருவாரூரில் செவ்வாய்க்கிழமை மாலை மழை பெய்ததால், தண்ணீரின்றி காய்ந்திருந்த சம்பா பயிர்கள் துளிர்விட்டு வளரும் சூழல் ஏற்பட்டுள்ளது.

மாவட்டத்தில் தற்போது நடவு முறையிலும், நேரடி நெல் விதைப்பு மூலமும் சுமார் 1.50 லட்சம் ஏக்கருக்கு அதிகமாக சம்பா சாகுபடி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காவிரியில் போதிய அளவு தண்ணீர் வராததால் நேரடி நெல் விதைப்பு வயல்களில் முளைத்த பயிர்கள் பல இடங்களில் காய்ந்தும், காய்ந்து போகும் சூழலும் இருந்து வந்தது.

இதனால் கர்நாடகத்திடமிருந்து தண்ணீர் பெற்றுத் தரக்கோரி மாவட்டத்தில் விவாயிகள் மறியல் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில், செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணியளவில் திருவாரூர் நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுமார் 45 நிமி டம் மழை பெய்தது.

இந்த மழை சம்பா பயிருக்கு முழுமையான பயனைக் கொடுக்காவிட்டாலும், காய்ந்த நிலையிலுள்ள பயிர்கள் துளிர்விட்டு வளர்வதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. வரும் நாள்களில் பாசன வாய்க்கால்களில் தண்ணீர் வந்து, மழையும் பெய்தால் சம்பா பயிர்களுக்கு மிகவும் பயனாக இருக்கும்.

### விதை விற்பனை நிலையங்களில் திடீர் ஆய்வு

புதுக்கோட்டையிலுள்ள விதை விற்பனை நிலையங்களில் விதை ஆய்வு துணை இயக்குநர் ஆர்.எஸ். மனோகரன் செவ்வாய்க்கிழமை திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

முன்னதாக தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்ட விதை ஆய்வாளர்களுக்கான மாதாந்திர ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்று விதை ஆய்வாளர்களின் விதை விற்பனை நிலைய ஆய்வு, விதை மாதிரிகள் எடுத்த விவரங்களை ஆய்வு செய்து அறிவுரை வழங்கினார்.

தொடர்ந்து புதுக்கோட்டையிலுள்ள சில விதை விற்பனை நியைங்களில் ஆய்வு மேற்கொண்டார். அதில், கடையிலுள்ள விதைகள் விதை கொள்முதல் பட்டியல், விதை இருப்புப்பதிவேடு விற்பனை பட்டியல்

போன்றவற்றைச் சரிபார்த்தார். மேலும் விதை விற்பனையாள்கள் விதை விற்பனை செய்யும்போது கண்டிப்பாக விற்பனைப் பட்டியல் (பில்) வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கும் விற்பனைப் பட்டியலில் விதை விற்பனை உரிம எண், பயிர், ரகம், குவியல்எண், காலாவதி நாள், வாங்குவோர், விற்பவர் கையொப்பம், விவசாயியின் முழு முகவரி, செல்லிடப்பேசி எண் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும். மேலும் விதை விற்பனையாளர்கள் பிரதி மாதந்தோறும் 5 -ஆம் தேதிக்குள் விதை இருப்பு, விற்பனை விவரங்களை அலுவலகத்திற்கு தவறாமல் அனுப்ப வேண்டும் எனவும் அறிவுறுத்தினார். ஆய்வின்போது விதை ஆய்வாளர்கள் பாண்டி, ப்ரூக் அப்துல்லா, சிவகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.

## பட்டு வளர்ப்பு பயிற்சியில் பங்கேற்க அழைப்பு

பட்டு வளர்ப்பு, நூற்பு பயிற்சியில் பங்கேற்க மாவட்ட நிர்வாகம் அழைப்பு விடுத்துள்ளது.

இதுகுறித்து ஆட்சியர் என். சுப்பையன் தெரிவித்திருப்பது: கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் தமிழ்நாடு அரசுப் பட்டு வளர்ச்சித் துறை கட்டுப்பாட்டில் இயங்கும் மாநில அளவிலான தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையத்தின் மூலம் விவசாயிகள், நூற்பாளர்கள் மற்றும் துறை அலுவலர்களுக்கு மத்திய, மாநில அரசு நிதி உதவியுடன் பயிற்சிகள் கடந்த ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு ஜவுளித் துறைத் திட்டத்தின் கீழ் நிகழாண்டில் 2,000 பட்டுப்புழு வளர்ப்பாளர்களுக்கு 5 நாள்கள் பயிற்சியும், 500 பட்டு நூற்பாளர்களுக்கு 15 நாள்கள் பயிற்சியும் வழங்கப்படுகிறது.

இதில் பங்கேற்க மாவட்ட தொழில் மையம், நாஞ்சிக்கோட்டை ரோடு, தஞ்சாவூர்-6 (அலுவலக தொலைபேசி எண்கள் 255318, 257345) என்ற முகவரியில் உள்ள அலுவலகத்தை அணுகலாம்.

**"மீன்வளத் துறையில் தாற்காலிக உதவியாளர் பணியில் சேர விரும்புவோருக்கு அழைப்பு'**

தூத்துக்குடி மீன்வளத் துறையில் தாற்காலிக புள்ளிவிவர சேகரிப்பு உதவியாளர் பணியில் சேர விரும்புவோர் நேர்முகத் தேர்வில் பங்கேற்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ம. ரவிகுமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மீன்வளத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் நிலைத்த மீன்வள வாழ்வாதார திட்டத்தின் கீழ், தாற்காலிக புள்ளி விவர சேகரிப்பு உதவியாளர் பணிக்கு ஒருவர் ஓராண்டுக்கு ஒப்பந்த அடிப்படையில் தேர்வு செய்யப்பட உள்ளார்.

இந்தப் பணிக்கு விண்ணப்பிப்பவர்கள் ஏதேனும் ஒரு பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மீன்வள பட்டப்படிப்பு, கடல் உயிரியல் பட்டப்படிப்பு மற்றும் விலங்கியல் பட்டப்படிப்பு படித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பிப்பவர்கள் கணினியில் அடிப்படை அறிவு பெற்றிருத்தல் வேண்டும். மீன்வளம் பற்றி அனுபவம் இருந்தால் முன்னுரிமை அளிக்கப்படும்.

21 வயது முதல் 40 வயது வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

பல்வேறு மீனவ கிராமங்களுக்கு பயணம் செய்து, மீன்வள விவரங்கள் சேகரிப்பதற்கான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும். மாத ஒப்பந்த ஊதியமாக ரூ.12 ஆயிரம் வழங்கப்படும்.

எனவே, தகுதி உள்ளவர்கள் தேவையான சான்றிதழ்களுடன் செப்டம்பர் 30 ஆம் தேதி முற்பகல் 11 மணிக்கு மீன்துறை இணை இயக்குநர் (மண்டலம்) அலுவலகத்தில் நடைபெறும் நேர்முகத் தேர்வில் பங்கேற்கலாம் என செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## கர்நாடக அணைகள் திறப்பு எதிரொலி: மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு



மேட்டூர்,

கர்நாடக அணைகளில் தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

தண்ணீர் திறப்பு

மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்காக கடந்த மாதம் 9-ந் தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டது. அப்போது அணையின் நீர்மட்டம் 96 அடியாக இருந்தது. அணைக்கு போதுமான நீர்வரத்து இல்லாத நிலையில், அணையில் இருந்து தொடர்ந்து டெல்டா மற்றும் கால்வாய் பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்பட்டு வருவதால் அணையின் நீர்மட்டம் படிப்படியாக குறைந்து கொண்டே வருகிறது. டெல்டா பாசனத்துக்கு ஜனவரி மாதம் வரை தண்ணீர் அளிக்கப்பட வேண்டிய சூழ்நிலையில் தற்போது அணையில் உள்ள நீர்இருப்பு இன்னும் 20 நாட்களுக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும். இதன்

காரணமாக காவிரி நடுவர்மன்றத்தின் இறுதி தீர்ப்புபடி கர்நாடக மாநிலத்தில் இருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விட நடவடிக்கை எடுக்க வேண்டுமென மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தியது.


நீர்வரத்து அதிகரிப்பு

இந்த நிலையில் கடந்த 3 நாட்களுக்கு முன்பு கர்நாடக மாநிலம் கபினி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகளில் இருந்து வினாடிக்கு 8 ஆயிரத்து 500 கனஅடி வீதம் காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த தண்ணீர் நேற்று முன்தினம் இரவு மேட்டூர் அணையை வந்தடைந்தது. இதன் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து சற்று அதிகரித்து உள்ளது.

கடந்த 20-ந் தேதி அணைக்கு வினாடிக்கு 700 கனஅடி வீதம் வந்து கொண்டிருந்த தண்ணீர் நேற்று வினாடிக்கு 6,197 கனஅடியாக அதிகரித்து உள்ளது. இருப்பினும் அணையில் இருந்து டெல்டா மற்றும் கால்வாய் பாசன தேவைக்காக வினாடிக்கு 13 ஆயிரத்து 800 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

நீர்மட்டம் குறைகிறதுஎனவே, அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவைவிட அணைக்கு நீர்வரத்து குறைவாகவே இருப்பதால் அணையின் நீர்மட்டம் மெதுவாக குறைந்து கொண்டே வருகிறது. நேற்றைய நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 68.16 அடியாக குறைந்தது. நீர்வரத்து வினாடிக்கு 15 ஆயிரம் கனஅடிக்கு மேல் அதிகரித்தால் மட்டுமே அணையின் நீர்மட்டம் தொடர்ந்து ஒரே நிலையில் இருக்க வாய்ப்பு உள்ளது.

## திருமூர்த்தி அணைக்கு 25–ந் தேதி தண்ணீர் திறப்பு: காண்டூர் கால்வாய் சீரமைப்பு பணியை பார்வையிட்ட விவசாயிகள்



ஆனைமலை

காண்டூர் கால்வாயை சீரமைக்கும் பணி முடிந்ததையடுத்து 25–ந் தேதி திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. இதையொட்டி சீரமைக்கும் பணிகளை நேற்று விவசாயிகள் பார்வையிட்டனர்.

காண்டூர் கால்வாய்

பரம்பிக்குளம்– ஆழியாறு திட்டத்தின் (பி.ஏ.பி) கீழ் லட்சக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. பரம்பிக்குளம் அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் சர்க்கார்பதியில் மின் உற்பத்தி செய்யப்பட்டு, காண்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு கொண்டு செல்லப்படுகிறது. அங்கிருந்து பி.ஏ.பி. திட்ட கால்வாய்கள் மூலம் விவசாய நிலங்களுக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது.

49.3 கிலோ மீட்டர் தூரமுள்ள காண்டூர் கால்வாய் அமைக்கப்பட்டு பல ஆண்டுகள் கடந்து விட்டதால், பல இடங்களில் இயற்கை சீற்றத்தால் சேதம் அடைந்து இருந்தன. இதனால் கால்வாயில் திறக்கப்படும்

தண்ணீர் வீணாகி வந்தது. எனவே கால்வாயை சீரமைக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்தது.

<u>விவசாயிகள் பார்வையிட்டனர்</u>

இதைத்தொடர்ந்து கடந்த 2011–ம் ஆண்டு ரூ.221.5 கோடி நிதி ஒதுக்கப்பட்டு காண்டூர் கால்வாய் சீரமைக்கும் பணி தொடங்கியது. இதன்படி 6 மாதம் சீரமைக்கும் பணி, 6 மாதம் தண்ணீர் திறப்பு பணிகள் நடைபெற்று வந்தன. கடந்த 4 ஆண்டுகளாக நடைபெற்று வந்த பணிகள் தற்போது முடியும் தருவாயில் உள்ளன.

இந்த நிலையில் நேற்று திருமூர்த்தி அணை பாசன சபை தலைவர் மெடிக்கல் பரமசிவம், ஆழியாறு நீர்த்தேக்க பாசன சபை தலைவர் சின்னசாமி மற்றும் பாசன சபைகளை சேர்ந்த விவசாயிகள் காண்டூர் கால்வாய் சீரமைப்பு பணிகளை பார்வையிட்டனர். அவர்கள் ‘0’ பாயிண்ட் என்ற இடத்தில் இருந்து சீரமைக்கும் பணி எவ்வாறு நடைபெற்றுள்ளது என்று பார்வையிட்டனர். அப்போது பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் இளங்கோவன், செயற்பொறியாளர் சுப்பிரமணியம், உதவி செயற்பொறியாளர் கருணாகரன் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

<u>திருப்தி</u>

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:–

காண்டூர் கால்வாய் சீரமைக்கும் பணி திருப்திகரமாக உள்ளது. இந்த கால்வாயில் மொத்தம் 10 இடங்களில் சுரங்க கால்வாய்கள் உள்ளன. இதன் நீளம் 10 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. இந்த சுரங்க கால்வாய்க்குள் சிதிலமடைந்துள்ளன.

இவற்றை சீரமைக்க வேண்டும். தற்போது மற்ற இடங்களில் கால்வாய் சீரமைக்கப்பட்டுள்ளதால் தண்ணீர் வீணாவது பெருமளவு குறையும்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

இது தொடர்பாக கண்காணிப்பு பொறியாளர் இளங்கோவன் கூறியதாவது:–

25–ந் தேதி தண்ணீர் திறப்பு

காண்டூர் கால்வாயில் உள்ள சுரங்க கால்வாய் பகுதியை சீரமைக்க தனியாக திட்டம் வடிவமைக்கப்படும். கால்வாய் மோசமாக இருந்த போது சர்க்கார்பதியில் வினாடிக்கு 1050 கன அடி தண்ணீர் திறந்தால் 750 கன அடி தண்ணீர்தான் திருமூர்த்தி அணைக்கு செல்லும். கால்வாய் சீரமைக்கப்பட்டுள்ளதால் 1050 கன அடி திறந்தால் 1000 கனஅடி வரை தண்ணீர் திருமூர்த்தி அணைக்கு செல்லும். இதன் மூலம் அணை விரைவில் நிரம்பி விடும்.

திருமூர்த்தி அணைக்கு காண்டூர் கால்வாய் வழியாக வருகிற 25–ந் தேதி தண்ணீர் திறக்கப்படுகிறது. அணையில் தண்ணீர் நிரம்பியதும் 4–வது மண்டல பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## வரத்து அதிகரிப்பால் கோவையில் பெரிய வெங்காயம் விலை கிலோவுக்கு ரூ.12 குறைந்தது



கோவைக்கு பெரிய வெங்காயம் வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் கிலோவுக்கு ரூ.12 விலை குறைந்துள்ளது.

பெரிய வெங்காயம்

கோவை–மேட்டுப்பாளையம் சாலையில் எம்.ஜி.ஆர். மொத்த காய்கறி விற்பனை சந்தை செயல்பட்டு வருகிறது. கோவை மாவட்டம், வெளி மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களில் உற்பத்தியாகும் காய்கறிகள் இங்கு கொண்டுவரப்பட்டு, மொத்தமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதன்படி மராட்டியம், புனே, பெங்களூரு ஆகிய இடங்களில் இருந்து லாரிகள் மூலமாக பெரிய வெங்காயம் கொண்டு வரப்படுகிறது. இதன்படி நாள்தோறும் 25 லோடு பெரிய வெங்காயம் கொண்டு வரப்படுகிறது. சுமார் 500 டன் கொண்டு வரப்பட்டு, கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது. இதேபோல் அண்டை மாநிலமான கேரளாவுக்குக்கும் இங்கிருந்து சுமார் 100 டன் பெரிய வெங்காயம் கொண்டு செல்லப்படுகிறது.

கடும் விலை உயர்வு

இந்தநிலையில் கடந்த 2 மாதங்களாக வரத்து குறைவு காரணமாக பெரிய வெங்காயம் விலை கடுமையாக உயர்ந்து காணப்பட்டது. 500 டன் பெரிய வெங்காயம் கோவைக்கு வரத்து இருந்த நிலையில், வெறும் 160 டன் மட்டுமே வந்தது. தேவை அதிகரிப்பால் விலையும் 3 மடங்கு உயர்ந்து காணப்பட்டது.

மொத்தவிலை கிலோ ரூ.50 முதல் ரூ.60 வரை இருந்தது. இதனால் சில்லரை விற்பனையில் பெரிய வெங்காயம் கிலோ ரூ.72–க்கு விற்கப்பட்டது. இதனால் பொதுமக்கள் கடும் அவதிக்கு உள்ளாகினர். இதேநேரத்தில் சின்ன வெங்காயம் கிலோ ரூ.25 முதல் ரூ.30 வரை விற்கப்பட்டது. இதனால் வெங்காயத்தின் தேவையை பொதுமக்கள் எளிதாக சமாளித்தனர்.

வரத்து அதிகரிப்பு

தற்போது கோவைக்கு பெரிய வெங்காயம் வரத்து அதிகரிக்க தொடங்கி உள்ளது. தற்போது நாள்தோறும் 300 டன் வரை பெரிய வெங்காயம் கோவைக்கு வருகிறது. இதனால் மொத்த விற்பனை விலை குறைந்து தற்போது கிலோவுக்கு ரூ.25 முதல் ரூ.50 வரை உள்ளது.

இதனால் சந்தைகளில் பெரிய வெங்காயம் ரகத்திற்கு ஏற்ப கிலோ ரூ.40 முதல் ரூ.60 வரை விற்கப்படுகிறது. கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் பெரிய வெங்காயம் விலை கிலோவுக்கு ரூ.12 வரை குறைந்து உள்ளது. வரும் வாரங்களில் மேலும் விலை படிப்படியாக குறையும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

## வடகிழக்கு பருவமழை தொடக்கம்: ஊட்டி– கூடலூர் சாலையில் அபாயகரமான மரங்கள் வெட்டி அகற்றம்



ஊட்டி

வடகிழக்கு பருவமழை தொடங்குவதை முன்னிட்டு ஊட்டி– கூடலூர் சாலையில் உள்ள அபாயகரமான மரங்களை வெட்டி அகற்றும் பணியில் வனத்துறையினர் ஈடுபட்டு உள்ளனர்.

பருவமழை தொடக்கம்

நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் மே மாதம் தொடங்கி ஆகஸ்டு மாதம் வரை தென்மேற்கு பருவமழையும், செப்டம்பர் மாதம் தொடங்கி நவம்பர் மாதம் வரை வடகிழக்கு பருவமழையும் பெய்வது வழக்கம்.

இந்த பருவமழைக்காலங்களில் சாலையோரங்களில் உள்ள மரங்கள் மழைக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் சாலையின் குறுக்கே விழுந்து விடுகின்றன. இதனால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்படுவதுடன், வாகனங்களின் மீது மரங்கள் விழுந்து உயிர்ச்சேதமும் ஏற்படுகிறது. குறிப்பாக ஊட்டி– கூடலூர் சாலையில் கடந்த மே, ஜூன் மாதங்களில் ஏராளமான மரங்கள் விழுந்து போக்குவரத்து பாதிப்பை ஏற்படுத்தின.

அபாயகரமான மரங்கள் கணக்கெடுப்பு

இதனை தொடர்ந்து நீலகிரி மாவட்ட கலெக்டர் சங்கர் உத்தரவின் பேரில் வருவாய் துறையினர், வனத்துறையினர் இணைந்து அபாயகரமான மரங்கள் குறித்து கணக்கெடுப்பு நடத்தினர். இந்த

நிலையில் ஊட்டி– கூடலூர் சாலையில் அபாயகரமான நிலையில் உள்ள மரங்களை வெட்டும் பணியில் வனத்துறையினர் ஈடுபட்டு உள்ளனர்.

இதுகுறித்து மாவட்ட வன அலுவலர் பத்ரசாமி கூறியதாவது:– ஊட்டி– கூடலூர், ஊட்டி– கோத்தகிரி, எமரால்டு– மஞ்சூர், குன்னூர்– குந்தா உள்ளிட்ட பல்வேறு சாலைகளின் இருபுறமும் ராட்சத கற்பூர மரங்கள் மற்றும் சீகை மரங்கள் அதிகளவில் வளர்ந்து உள்ளன. இந்த மரங்கள் மழைக்காலங்களில் சாலையின் குறுக்கே விழுவதால் அடிக்கடி போக்குவரத்து பாதிப்பு ஏற்படுகிறது.

<u>மரங்கள் வெட்டி அகற்றம்</u> எனவே இந்த சாலைகளில் உள்ள அபாயகரமான மரங்கள் கணக்கிடப்பட்டன. இதில், ஆயிரம் மரங்கள் அபாயகரமானது என்று கணக்கிடப்பட்டு உள்ளது. இதில் மிகவும் மோசமான நிலையில் காணப்படும் மரங்கள் முழுவதும் வெட்டி அகற்றப்படும். மீதியுள்ள மரங்களின் கிளைகள் மட்டுமே வெட்டி அகற்றப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வருகிற 25–ந்தேதி நடக்கிறது



பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் தரேஸ் அஹமது வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:–

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வருகிற 25–ந்தேதி(வெள்ளிக்கிழமை) அன்று காலை 10 மணிக்கு பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டமன்றத்தில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் வேளாண்மை சம்பந்தமாக நீர்பாசனம், வேளாண்மை சம்பந்தப்பட்ட கடன் உதவிகள், வேளாண்மை இடுபொருட்கள், வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும். விவசாயிகள் அன்றைய தினம் குறைகளை தெரிவிக்கலாம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

**தனுஷ்கோடி பகுதியில் உலாவரும் கடல் புறாக்கள் கடற்கரை மணலிலேயே முட்டையிட்டு குஞ்சு பொரிக்கின்றன**



தனுஷ்கோடி கடற்கரை பகுதியில் ஆயிரக் கணக்கான கடல் புறாக்கள் உலா வருகின்றன. இவை மணல் தீடையிலேயே முட்டையிட்டு குஞ்சு பொரித்து வாழ்ந்து வருகின்றன.

கடல் புறா

ராமேசுவரம் தீவு பகுதியை சுற்றியுள்ள கடற்கரை பகுதிகளில் பல வகை அரிய பறவைகள் வாழ்ந்து வருகின்றன. இதில் கடற்கரை பகுதியையே வாழிடமாக கொண்டு வாழ்ந்து வரும் பறவைகள் என்றால் கடல் காவா என்று அழைக்கக் கூடிய கடல் புறாக்கள் தான். ராமேசுவரம் அருகே உள்ள தனுஷ்கோடி எம்.ஆர்.சத்திரம் கடற்கரை, கம்பிப்பாடு, அரிச்சல்முனை ஆகிய கடற்கரை பகுதிகளில் ஆயிரக் கணக்கான கடல் புறாக்கள் வாழ்ந்து வருகின்றன.இதை தவிர தனுஷ்கோடியில் இருந்து நடுக்கடல் பகுதியில் உள்ள மணல் தீடைகளிலும் ஆயிரக்கணக்கான கடல் புறாக்கள் உள்ளன. தனுஷ்கோடி கடற்கரை மற்றும் கடல் பகுதியில் சுற்றித் திரியும் கடல் புறாக்கள், வாத்துகளின் கால்கள் போல

அமைப்பை கொண்டுள்ளன. இவை கடலில் நீந்துவதும், மிக உயரத்தில் பறந்து சென்று அங்கிருந்து மீன்களை பிடிக்க கடலுக்குள் குதிப்பதும் பார்ப்பதற்கு மிக ரம்மியமாக காட்சி அளிக்கிறது.

கோரிக்கை

பொதுவாக பறவைகள் மரங்களில் கூடு கட்டி, முட்டையிட்டு குஞ்சு பொரித்து இனப்பெருக்கம் செய்கின்றன. ஆனால் கடல் புறாக்களோ கடற்கரை பகுதியிலேயே முட்டையிட்டு குஞ்சு பொரித்து இனப் பெருக்கம் செய்து விநோதமாக வாழ்ந்து வருகின்றன. தனுஷ்கோடி எம்.ஆர்.சத்திரம் கடற் கரையில் இருந்து 5 கிலோ மீட்டர் துரம் வரையிலான தனுஷ்கோடி கம்பிபாடு,பாலம் கடற்கரை வரையிலும் தினமும் ஆயிரக் கணக் கான கடல் புறாக்கள் கடற் கரை பகுதியே யே கூட்டமாக நின்றபடி இரை தேடுவதையும், அழகாக ஒன்று சேர்ந்து பறந்து செல்வதும் கண்கொள்ளாக் காட்சியாகும்.

இதுகுறித்து வனத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

ராமேசுவரம் தீவு பகுதிகளில் கடல் காவா என்று அழைக்கக் கூடிய கடல்புறா, உள்ளான் குருவி, கடல்காகம், கடல் பருந்து என 200 வகையான பறவைகள் வாழ்ந்து வருகின்றன. இதில் அதிக அளவில் வாழந்து வரும் பறவைகள் என்றால் கடல் காவா என்று அழைக்கக் கூடிய கடல் புறாக்கள் தான்.

40 ஆயிரம்

தனுஷ்கோடி கடற்கரை பகுதியில் மட்டும் சுமார் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடல் புறாக்கள் வாழ்ந்து வருகின்றன.இதை தவிர ராமேசுவரம், பாம்பன் அருகேயுள்ள குருசடைத்தீவு,சிங்கிலி தீவு பகுதிகளிலும் சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடல் புறாக்கள்

வாழ்ந்து வருகின்றன. இவை கடலில் உள்ள சிறிய மீன்கள் மற்றும் கடற்கரை பகுதியில் உள்ள சிறிய சங்குகள்,சிப்பிகள் போன்ற உயிரினங்களை உணவாக உட் கொள்கின்றன.

கடற்கரை பகுதியை வாழ்நாள் முழுவதும் வாழிடமாக கொண்டு வாழ்ந்து வரும் பறவை என்றால் அது கடல் புறா தான். ஆட்கள் நடமாட்டம் இல்லாத தனஷ்கோடி அருகே நடுக்கடல் பகுதியில் உள்ள மணல் தீடை மற்றும் தீவு பகுதிகளில் உள்ள கடற்கரை பகுதி மற்றும் கரையோரம் உள்ள புற்கள், பாசிகளில் தான் இவை முட்டையிட்டு குஞ்சு பொரித்து வாழ்ந்து வருகின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

**மீன் உற்பத்தியை அதிகரிக்கலாம் மீன்வள பல்கலைக்கழக துணைவேந்தர் பேச்சு**



உள்நாட்டு நீர் பரப்பை முறையாக பாதுகாத்தால் மீன் உற்பத்தியை அதிகரிக்கலாம் என்று, மீன்வள பல்கலைக்கழக துணைவேந்தர் கூறினார்.

கலந்துரையாடல்

தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகம் சார்பில் சினைமீன் பராமரிப்பு

மற்றும் தரமான மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்வது தொடர்பான அறிஞர்கள், விவசாயிகளுடனான கலந்துரையாடல் தஞ்சையில் நேற்று நடைபெற்றது. மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் காரல்மார்க்ஸ் வரவேற்றார்.

இந்த நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி மீன்வள பல்கலைக்கழக துணைவேந்தர் பாஸ்கரன் மணிமாறன் பேசியதாவது:-

மழைஅளவு குறைவான நாடு நமது நாடு. நமது நாட்டில் நீர் பரப்பளவு 3.7 லட்சம் எக்டேர் ஆகும். இந்த அளவு நீர்பரப்பில் 4.5 லட்சம் டன் மீன்கள் உற்பத்தி செய்யலாம். ஆனால் தற்போது 1 லட்சத்துக்கும் குறைவாக 87 ஆயிரம் டன் மீன்கள் தான் உற்பத்தி செய்கிறோம் இதனால் மத்திய அரசு மீன் உற்பத்தியை பெருக்க மானியம் அளித்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதிகரிக்கலாம்

தற்போது கடலில் பிடிக்கப்படும் மீன்களை விட, உள்நாட்டு மீன் உற்பத்தி மூலம் கிடைக்கும் மீன்களே அதிகம். கடலில் தற்போது அதிகமாக மீன்கள் பிடிக்க முடியவில்லை. எனவே உள்நாட்டு நீர் பரப்பை முறையாக பாதுகாத்தால் மீன் உற்பத்தியை அதிகரிக்கலாம். மீன் உணவு சத்தான உணவு. இதனை பெருக்கினால் சத்துள்ள உணவு கிடைக்கும். மக்கள் ஆரோக்கியமான வாழ்க்கை வாழலாம். உள்நாட்டு மீன் உற்பத்தியில் தஞ்சை மாவட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது.

உள்நாட்டு மீன் உற்பத்தி செய்ய தரமான மீன்குஞ்சுகளை விற்பனை செய்ய வேண்டும். மேலும் பராமரிப்பு, மரபியல் சார்ந்த மேலாண்மை இனப்பெருக்கம் செய்வது குறித்து பவானிசாகரில் மீன்வள

பல்கலைக்கழகம் சார்பில் ஒருமையம் ஏற்படுத்த உள்ளோம். அங்கு தரமான மீன்குஞ்சுகள் வழங்க உள்ளோம். வேளாண்மை புரட்சி ஏற்படுத்தியது போல், பால் உற்பத்தியில் புரட்சி ஏற்படுத்தியது போல் மீன் உற்பத்தியிலும் புரட்சி ஏற்படுத்துவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம்

இதில் மீன் வளர்ப்புகள், மீன் தீவனங்கள் குறித்த பயிற்சி கையேடுகள் வெளியிடப்பட்டன. மேலும் மீன்வளபல்கலைக்கழகம் மற்றும் ஒடிசாவில் உள்ள நன்னீர் நீர்வாழ் உயிரின வளர்ப்பு மையம் மற்றும் மீன் வளர்ப்பு பண்ணைகள் இணைந்து தரமான மீன்குஞ்சுகள் மற்றும் சினைமீன்கள் உற்பத்தி செய்வது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொண்டனர்.

இதில் ஒடிசா மாநிலத்தில் உள்ள மத்திய நன்னீர் நீர்வாழ் உயிரின வளர்ப்பு மைய இயக்குனர் ஜெயசங்கர், தூத்துக்குடி மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் சுகுமார், விஞ்ஞானி சுந்தரே, மீன்வளர்ப்பு பண்ணை விவசாயிகள் ரவிச்சந்திரன், புகழேந்தி ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். பின்னர் நடந்த நிகழ்ச்சியில் விஞ்ஞானிகள் மகபாத்ரா, சகா, நந்தி, பேராசிரியர் செந்தில்குமார் ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு தலைப்புகளில் பேசினர்.

## காலிபிளவர் செடிகளில் நோய் தாக்குதல் மாடுகளுக்கு இரையாகும் சோகம்



தேனி பகுதியில் காலிபிளவர் செடிகளில் நோய் தாக்கி விளைச்சல் இல்லாமல் போனதால், அந்த செடிகள் மாடுகளுக்கு இரையாகி வருகிறது.

காலிபிளவர் சாகுபடி

தேனி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் காய்கறி சாகுபடி நடந்து வருகிறது. தேனி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் நூற்றுக்கணக்கான விவசாயிகள் பல்வேறு வகையான காய்கறி சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். தேனி அருகில் உள்ள அரப்படித்தேவன்பட்டி, குன்னூர், கோட்டூர், முத்தனம்பட்டி போன்ற பகுதிகளில் காலிபிளவர் செடிகளில் நோய் தாக்குதல் ஏற்பட்டதால் அதற்கு மருந்து தெளிக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டனர்.

பல்வேறு மருந்துகள் தெளித்தும் நோய் தாக்குதல் முழுமையாக சரியாகவில்லை. முத்தனம்பட்டி பகுதியில் காலிபிளவர் செடியில் பூக்கள் பூக்காமல் செடியின் வளர்ச்சியும் போதிய அளவில் இல்லை. பல மருந்துகள் தெளித்தும் பூக்கள் பூக்காமல் உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மாடுகளுக்கு இரை

காலிபிளவர் செடியில் மகசூல் பெற முடியாததால் விரக்தி அடைந்த விவசாயிகள் தங்களின் தோட்டங்களில் மாடுகளை மேய விட்டு, மாடுகளுக்கு செடிகளை இரையாக்கி வருகின்றனர். ஆயிரக்கணக்கில் செலவு செய்த விவசாயிகள், நஷ்டம் அடைந்து உள்ளனர்.

மழைப்பொழிவும் இல்லாததால் மாற்று பயிர் விவசாயத்தை எப்போது தொடங்குவது? எப்படி தொடங்குவது? என்ற கவலையில் விவசாயிகள் உள்ளனர். காலிபிளவர் பூக்காமல் மலட்டுத் தன்மையாக மாறியதற்கான காரணத்தை தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்து கண்டறிந்து தெரிவிக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## திருச்சி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை தொடர்பான ஆலோசனை கூட்டம் கலெக்டர் பழனிச்சாமி தலைமையில் நடந்தது



திருச்சி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை தொடர்பான ஆலோசனை கூட்டம் கலெக்டர் பழனிச்சாமி தலைமையில் நடந்தது.

முன்னெச்சரிக்கை கூட்டம்

திருச்சி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் பேரிடர் மேலாண்மை மற்றும் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பேரிடர் மேலாண்மை மற்றும் வடகிழக்கு பருவமழை தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து பொதுப்பணித்துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், சுகாதாரத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வேளாண்மைத் துறை, வேளாண் பொறியியல் துறை, தீயணைப்புத் துறை, மீன்வளத்துறை,

நெடுஞ்சாலைத்துறை உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்களுடன் விரிவாக ஆலோசனை செய்யப்பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டது.

கூட்டத்தை தொடங்கி வைத்து கலெக்டர் பழனிச்சாமி பேசும்போது கூறியதாவது:–

<u>தயார் நிலையில் மணல் மூட்டை</u>

வடகிழக்கு பருவமழை வழக்கமாக அக்டோபர், நவம்பரில் தொடங்கும் என்பதால் அனைத்துத் துறை அலுவலர்களும் தங்கள் துறைகளின் சார்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளில் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும். பொதுப்பணித்துறையினர் கடந்த காலங்களில் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்ட இடங்களை கண்டறிந்து போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். வெள்ள பாதிப்பு ஏற்பட்டால் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள தேவையான அளவு மணல் மூட்டைகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

நெடுஞ்சாலை துறையினர் சாலையின் தாழ்வான பகுதிகளை கண்டறிந்து வெள்ளசேதம் ஏற்படாமல் தடுப்பதோடு சாலையோரங்களில் விழும் மரங்களை உடனடியாக அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கால்நடை பராமரிப்புத் துறையினர் வெள்ள பாதிப்பால் ஏற்படும் கால்நடை இறப்புகளுக்கு உடனடியாக சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டும்.

மின்சாரத்துறையினர் மழைக்காலங்களில் சேதம் ஏற்படும் மின்கம்பங்களை உடனடியாக அகற்றுவதோடு, முன்கூட்டியே பழுதடைந்த மின்கம்பங்களை கண்டறிந்து சீரமைக்க வேண்டும். தீயணைப்புத் துறையினர் போதிய அளவு மீட்பு மற்றும் தடுப்பு சாதனங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

<u>ஒத்திகை பயிற்சி</u>

மேலும், தாழ்வான குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டால் அப்பகுதியில் உள்ள பொதுமக்களை தற்காலிகமாக தங்க வைப்பதற்கு அருகிலுள்ள பள்ளிகளை தயாராக ஏற்பாடு செய்து வைத்திருக்க

வேண்டும். இதேபோன்று இயற்கை இடர்பாடுகள் மற்றும் மீட்புப்பணிகள் குறித்து வருவாய்த்துறை, காவல் துறை, தீயணைப்புத் துறை, கல்வி துறை, மருத்துவத் துறை ஆகியோரை ஒருங்கிணைத்து போலி ஒத்திகை பயிற்சி நடத்தப்பட வேண்டும்.

இக்கூட்டத்தில் தனித்துணை ஆட்சியர் (சிறப்புத்திட்டங்கள் செயலாக்கம்) கோவிந்தராஜன், துணை இயக்குநர் (சுகாதாரம்) ரவீந்திரன், உதவி ஆணையர் (கலால்) ரெங்கராஜன், கோட்டாட்சியர்கள் கணேசசேகரன், ராஜராஜன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் பாஸ்கரன், மாநகராட்சி செயற்பொறியாளர் அமுதவள்ளி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் இந்திராணி (கணக்குகள்), பாண்டியராஜன் (வேளாண்மை), வட்டார போக்குவரத்து அலுவலர்கள் சத்யநாராயணன், ராமசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்படும் கலெக்டர் மதிவாணன் தகவல்



திருவாரூர் மாவட்டத்தில் நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனைக்கு கொண்டு வரும் நெல்லுக்கான தொகை விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்பட உள்ளது என்று கலெக்டர் மதிவாணன் தெரிவித்துள்ளார்.

நெல் கொள்முதல்

திருவாரூர் மாவட்ட கலெக்டர் மதிவாணன் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது:-

திருவாரூர் மாவட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனைக்கு கொண்டு வரும் நெல்லுக்கான கிரயத்தொகை முழுவதும் விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்படும். இந்த திட்டம் வருகிற அக்டோபர் 1-ந் தேதி முதல் திருவாரூர் மாவட்ட அனைத்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கும் செயல்பாட்டிற்கு வருகிறது.

வங்கி கணக்கு எண்

விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வரும் அனைத்து நெல் மூட்டைகளுக்கும் உண்டான பட்டியல் தொகை முழுவதும் எலக்ட்ரானிக் கிளியரிங் சிஸ்டம் மூலம் அவர்களின் வங்கி கணக்கில் செலுத்தப்படும். எனவே விவசாயிகள் வங்கி கணக்கு எண் தெரியும்படி வங்கி பாஸ் புத்தக நகலினை கொள்முதல் நிலையங்களில் அளித்து பயனடைய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறியிள்ளார்.

தினகரன்

**கர்நாடக அணைகளில் தண்ணீர் திறப்பு மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**



பென்னாகரம்: கர்நாடக அணைகளில் இருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. தமிழகத்தில் காவிரி டெல்டா பாசன பகுதிக்கு மேட்டூர் அணையில் இருந்து கடந்த ஆகஸட் 9ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. கடை மடை பகுதிகளுக்கு போதிய தண்ணீர் போய் சேரவில்லை. இந்நிலையில் கர்நாடகத்தில் மழை இல்லை எனக்கூறி அங்குள்ள அணைகளில் இருந்து நீர் திறப்பை அம்மாநில அரசு குறைத்தது. இதனிடையே மேட்டூர் அணையின் நீர் மட்டம் வேகமாக சரிந்து வந்த நிலையில் கர்நாடக அணைகளில் இருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் காவிரியில் நீர்வரத்து அதிகரித்து வருகிறது.

நேற்று முன்தினம் இரு மாநில எல்லையான பிலிகுண்டுலுவில் நேற்று முன்தினம் வினாடிக்கு 6,000 கனஅடியாக வந்த நீர்வரத்து, நேற்று காலை வினாடிக்கு 10,200 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இதனால், மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் வினாடிக்கு 1,114 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று வினாடிக்கு 6,197 கனஅடியாக அதிகரித்தது. அணையில் இருந்து காவிரி டெல்டா மற்றும் கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்காக வினாடிக்கு 13,801

கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. நீர்வரத்து அதிகரித்துள்ளபோதிலும், பாசனத்திற்காக திறக்கப்படும் நீரின் அளவு அதிகளவில் உள்ளதால், அணையின் நீர் மட்டம் தொடர்ந்து சரிந்து வருகிறது. நேற்று முன்தினம் 68.96 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் நேற்று காலை 68.16 அடியாக சரிந்தது. நீர் இருப்பு 31.14 டிஎம்சி.

**நேபாளத்தில் பசுவை கொல்ல தடை: அரசு அறிவிப்பு**



காத்மாண்டு: நேபாள நாட்டின் தேசிய விலங்காக பசு அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை புதிய அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் வந்த நேபாள அரசு தற்போது பசுவை தேசிய விலங்காக அறிவித்துள்ளது. மேலும் தேசிய விலங்காக பசு இருப்பதால், அதை கொல்லவும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இதனை அந்நாட்டின் நேபாளி காங்கிரஸ் பொதுச் செயலாளர் கிருஷ்ண பிரசாத் சித்துலா தெரிவித்துள்ளார். ஏற்கனவே, இறைச்சிக்காக பசுவைக் கொலை செய்வது தடுக்கப்பட வேண்டும் என்று நேபாளத்தில் சட்டம் கொண்டு வரப்பட்டது. மதச்சார்பற்ற நாடாக தமது அரசியலமைப்பை மாற்றிக்கொண்ட நேபாளம், தற்போது இந்துக்களின் புனித விலங்கான பசுவை தேசிய விலங்காக அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**வேலூர் மாவட்டத்தில் பரவலான மழை; பொதுமக்கள் மகிழ்ச்சி அரக்கோணத்தில் அதிகபட்சம் 90.3 மி.மீ பதிவு**

வேலூர், : வேலூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் பரவலான மழை பெய்தது. இதில் அரக்கோணத்தில் அதிகபட்சமாக 90.3 மி.மீ மழை பதிவாகியிருந்தது. வேலூரில் கடந்த சில ஆண்டுகளாக பருவ மழை பொய்த்து போனதால், நீலத்தடி நீர்மட்டம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், சில தினங்களுக்கு முன்பு பெய்த ஓரளவு மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால் மீண்டும் வெயில் சுட்டெரிக்க தொடங்கிவிட்டது. இதேபோல், நேற்று முன்தினமும் காலை முதல் வெயில் சுட்டெரித்தது. பல்வேறு இடங்களில் மின்தடை செய்யப்பட்டதால் வீட்டில் இருக்க முடியாமலும் வெளியே செல்ல முடியாமலும் மக்கள் அவதிப்பட்டனர். இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் வேலூர் உட்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் திடீரென மழை பெய்ய தொடங்கியது. இதில் அரக்கோணத்தில் அதிகபட்சமாக 90.3 மி.மீ மழை பதிவாகியிருந்தது. வேலூரில், சுமார் 20 நிமிடங்கள் பெய்த லேசான மழையால் குளிர்ந்த காற்று வீசியது. இதனால், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை 8 மணி முதல் நேற்று காலை 8 மணி வரை பதிவான மழையளவு(மில்லி மீட்டரில்) வேலூர் - 13.2, அரக்கோணம் - 90.3, காவேரிப்பாக்கம் - 19.4, வாலாஜா - 7, சோளிங்கர் - 6.2, ஆற்காடு - 6, குடியாத்தம் - 4.2, மேல் ஆலந்தூர் - 23.2. மாவட்டத்தில் பதிவான மொத்த மழை அளவு - 169.5 மி.மீ. சராசரி மழை அளவு - 14.1 மி.மீ

தி இந்து
தமிழால் இணைவோம்

**ஊதிய உயர்வு போராட்டம்: கேரளத்தில் முடங்கும் அபாயத்தில் தேயிலை தொழில்_**



கேரள மாநிலத்தில் ஊதிய உயர்வு போராட்டங்களால் தேயிலை தொழில் முற்றிலுமாக முடங்கிப் போகும் நிலை உருவாகியுள்ளது.

தேயிலை பறிப்போர் தினசரி கூலியாக ரூ. 500 கேட்டு போராடி வருகின்றனர். இந்த அளவுக்கு ஊதியம் கொடுத்தால் தேயிலை தொழிலை நடத்த முடியாது என்று கேரள தேயிலை தொழில்துறை சங்கத்தின் தலைவர் சி. விஜய ராகவன் தெரிவித்துள்ளார்.

ரூ. 500 அளிப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டால் மார்ச் மாதத்துக்குப் பிறகு கேரள மாநிலத்தில் தேயிலை தொழிலே நிச்சயம் நடக்காது என்று அவர் கூறினார்.

தென்னிந்தியாவில் அதிக தேயிலை உற்பத்தி செய்யும் ஹாரிசன்ஸ் மலையாளம் லிமிடெட் நிறுவன தலைவரான அவர், தேயிலை தோட்ட தொழிலாளர்கள் 9 நாள் வேலை நிறுத்தப் போராட்டம் செய்ததில் பெண் ஊழியர்களுக்கு 20 சதவீத போனஸ் தர ஒப்புக் கொள்ளப்பட்டது.

அடுத்தகட்டமாக ரூ. 500 ஊதியம் வழங்குவது தொடர்பான பேச்சுவார்த்தை செப்டம்பர் 26-ம் தேதி நடைபெற உள்ளது. மூணாறு பகுதியில் நடைபெற்றதைப் போல தொடர்போராட்டத்தில் தேயிலை

தோட்டத் தொழிலாளர்கள் ஈடுபட்டார்களேயானால், அதாவது சாலையில் அமர்ந்து போராட்டம் நடத்தினால் பிரச்சினை கைமீறி போய்விடும் என்று அவர் குறிப்பிட்டார்.

இப்போது பெண் தொழிலா ளர்களுக்கு நாளொன்றுக்கு ரூ. 232 ஊதியம் வழங்கப்படுகிறது. அத்துடன் பிராவிடன்ட் ஃபண்ட் உள்ளிட்டவற்றுக்கு அளிக்கும் தொகையைக் கணக்கிட்டால் நாளொன்றுக்கு அவர்கள் பெறும் தொகை ரூ. 325 ஆகும். ஒருவேளை ரூ. 500-க்கு ஒப்பந்தம் கையெழுத்தானால் அவர்கள் பிற சலுகைகளோடு பெறும் தொகை ரூ. 720 ஆக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

**விலை, உற்பத்தி குறைவு**

ஒரு பணியாளர் மொத்தம் 21 கிலோ தேயிலையை பறித்தால் அதன் மூலம் 4.83 கிகி தேயிலைத் தூள் தயாரிக்க முடியும். தற்போது கொச்சியில் நடைபெற்ற ஏலத்தில் ஒரு கிலோ தேயிலை ரூ. 87-க்கு ஏலம் போனது. இத்தகைய சூழலில் ஒரு தேயிலை நிறுவனம் அதிக ஊதியம் தருவது எப்படி சாத்தியமாகும் என்று அவர் கேள்வியெழுப்பினார். ஒரு கிலோ ரூ. 178 விலையில் விற்பனையானால்தான் தேயிலை தோட்டத் தொழில் லாபகரமானதாக இருக்கும் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

மத்திய அரசு உத்தரவின்படி உற்பத்தியாகும் தேயிலையில் 70 சதவீதம் ஏலம் மூலம்தான் விற்பனை செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. 30 சதவீதம் மட்டுமே சந்தையில் விற்பனை செய்ய முடியும்.

இது தவிர தேயிலை உற்பத்தி நிறுவனங்கள் பணியாளர் களுக்கு வீட்டு வசதி, குடிநீர் விநியோகம், கழிவறை வசதி, மின்சாரம், மருத்துவமனை வசதி உள்ளிட்டவற்றை செய்து தர வேண்டியுள்ளது. இது தேயிலை தொழில் துறையினருக்கு மட்டுமே விதிக்கப்பட்டுள்ள விதியாகும். ஆனால் இதே நடைமுறை பிற தொழில் துறையினருக்கு இல்லை என்று அவர் குறிப்பிட் டார்.உற்பத்தி செலவு அதிகரித்துள்ள அதே நேரத்தில் தேயிலை விலை குறைவாக உள்ளது. இதனால் கடும் நெருக்கடியில்

தேயிலை தொழில் சிக்கியுள்ளது. இதை தொழிலாளர்களும் உணர்ந்து இத்தொழில் தொடர்ந்து நடைபெற ஒத்துவைப்பு தர வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.___\

டெல்லியில் 28-ம் தேதி கூடுகிறது_: காவிரி கண்காணிப்புக் குழு கூட்டம் கைகொடுக்குமா?_ - டெல்டா விவசாயிகள் எதிர்பார்ப்பு_



மேட்டூர் அணை நீர்மட்டம் நாளுக்கு நாள் குறைந்து வருவதால், குறுவை போல, சம்பா சாகுபடியும் பாதிக்கப்பட்டு விடுமோ என்ற கவலையில் ஆழ்ந்துள்ளனர் டெல்டா விவசாயிகள். டெல்லியில் வரும் 28-ம் தேதி நடக்கவுள்ள காவிரி கண்காணிப்புக் குழு கூட்டம், விவசாயிகள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேட்டூர் அணையில் போதிய நீர் இல்லாததால் இந்த ஆண்டு ஜூன் 12-ம் தேதி பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டது. ஆகஸ்ட் 9-ம் தேதிதான் மேட்டூர் அணை திறக்கப்பட்டது. எனினும் கர்நாடகத்தில் இருந்து போதிய அளவில் நீர்வரத்து இல்லாததால் மேட்டூர் அணை நீர்மட்டம் வேக மாகக் குறைந்து வருகிறது. 120 அடி உயரம் கொண்ட அணையில் தற்போது 68 அடி மட்டுமே நீர் இருப்பு உள்ளது. இதுவும் அதிகபட் சம் 3 வாரங்களுக்கு மட்டுமே வரும்.

இதனால் சம்பா சாகுபடியும் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள் ளது. இதனால், டெல்டா விவசாயி கள் அச்சத்தில் ஆழ்ந்துள்ளனர்.

இதற்கிடையே, காவிரி நடுவர்மன்ற உத்தரவுப்படி தமிழகத்துக்கு தரவேண்டிய தண்ணீரை கர்நாடகம் உடனே திறந்துவிட வேண்டும் என்ற கோரிக்கை நாளுக்கு நாள் வலுத்து வருகிறது. கர்நாடகத்தில் எதிர்பார்த்த அளவு பருவமழை பெய்யாததால் தண்ணீர் திறக்க இயலாது என்று கர்நாடக அரசு கூறிவருகிறது._

**கர்நாடகம் கூறுவது சரியல்ல_**

இது உண்மையில்லை என்று தமிழக அரசு கூறியுள்ளது. ''கர்நாடகத்தின் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தென்மேற்கு பருவகாலத்தில் வழக்கமாக பெய்யும் அளவுக்கே இந்த ஆண்டும் மழை பெய்துள்ளதாக இந்திய வானியல் ஆய்வு நிறுவனம் கூறியுள்ளது. எனவே, பருவமழை குறைந்ததாக கர்நாடகம் கூறுவது சரியல்ல'' என்று தமிழக தலைமைச் செயலாளர் கே.ஞானதேசிகன் தெரிவித்துள்ளார்.

இந்த சூழ்நிலையில், மத்திய நீர்வளத் துறை செயலாளர் தலைமையில் காவிரி கண்காணிப்புக் குழு கூட்டம் வரும் 28-ம் தேதி டெல்லியில் நடக்க உள்ளது. இதில் தமிழகம், கர்நாடகம், கேரளம், புதுச்சேரி மாநில தலைமைச் செயலாளர்கள் பங்கேற்கின்றனர். இக்கூட்டம் தமிழக விவசாயிகள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு காவிரி நீர்ப்பாசன விளைபொருட்கள் விவசாயிகள் நல உரிமை பாதுகாப்புச் சங்கத்தின் பொதுச் செயலாளர் மன்னார்குடி எஸ்.ரங்கநாதன் கூறியதாவது:_

**45 சதவீத நீர் தரவேண்டும்_**

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இயல்பான மழைப்பொழிவு இருக்கும் ஆண்டுகளில் கர்நாடகத்துக்கு 425 டிஎம்சி தண்ணீர் கிடைக்கும். அதில் இருந்து தமிழகத்துக்கு 192 டிஎம்சி, அதாவது, மொத்த நீர்இருப்பில் சுமார் 45 சதவீதம் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்பதுதான் காவிரி நடுவர்மன்றத்தின் இறுதி தீர்ப்பு.

போதிய மழை இல்லை எனக் கூறி கர்நாடகம் தண்ணீர் தர மறுப்பது சரியல்ல. இந்த ஆண்டில் கர்நாடக அணைகளுக்கு மொத்தம் எவ்வளவு தண்ணீர் கிடைத்தது என்பதைக் கணக்கிட்டு, அதில் 45 சதவீத அளவு நீரை தமிழகத்துக்கு திறந்துவிட வேண்டும். இந்த நியாயமான நீர் பங்கீடு தமிழக விவசாயிகளுக்கு கிடைப்பதை டெல்லியில் கூடும் காவிரி கண்காணிப்புக் குழு உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு ரங்கநாதன் கூறி னார்._

**கபினி நீரை திறக்கவேண்டும்_**

தமிழக காவிரி விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் பி.ஆர்.பாண்டியன் கூறும்போது, "கபினி அணை நீர் கர்நாடக பாசனத்துக்குப் பயன்படாது. அந்த நீரை உடனே தமிழகத்துக்கு திறக்க வேண்டும். கண்காணிப்புக் குழுவில் எடுக்கப்படும் முடிவுகள் அனைத்தும் காவிரி நடுவர்மன்ற இறுதித் தீர்ப்புக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்" என்றார்.

அக்டோபர் 3-வது வாரத் தில் வடகிழக்குப் பருவமழை தொடங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. ஆனால் மேட்டூர் அணை நீர்இருப்பு அதுவரை போதாது. தமிழகத்தில் சம்பா பயிரை காப்பாற்ற வேண்டுமானால், கர்நாடகத்தில் இருந்து தண்ணீர் திறந்துவிடுவது அவசியம். இதை உணர்ந்து காவிரி கண்காணிப்புக் குழு உரிய முடிவு எடுக்கும் என்ற எதிர்பார்ப்புடன் டெல்டா விவசாயிகள் காத்திருக்கின் றனர்._

Keywords: காவிரி கண்காணிப்புக் குழு கூட்டம், டெல்டா விவசாயிகள் எதிர்பார்ப்பு_, மேட்டூர் அணை நீர்மட்டம், சம்பா சாகுபடி

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## பாசனத்துக்கு தண்ணீர் திறப்பால் தினமும் ஒரு அடி குறையும் பவானி சாகர் அணை நீர்மட்டம்



பவானி சாகர் அணை பாசனத்துக்கும், குடிநீருக்கும் ஆதாரமாக விளங்குகிறது.

120 அடி கொள்ளளவு உள்ள இந்த அணைக்கு நீலகிரி மாவட்டம் மற்றும் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை பெய்யும் போது தண்ணீர் வரத்து அதிகமாகி அணையின் நீர்மட்டம் உயரும்.

இந்த அணையில்இருந்து பாசனத்துக்கு கடந்த மாதம் 16–ந்தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டது. அப்போது அணையின் நீர்மட்டம் 85.10 அடியாக இருந்தது.

இப்போது பாசனத்துக்கும் குடிநீருக்கும் அணையில் இருந்து 3500 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

இதனால் அணையின் நீர்மட்டம் படிப்படியாக குறைந்து வருகிறது. போதிய மழை இல்லாததால் அணையின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது. இதன்படி சராசரியாக தினமும் ஒரு அடி நீர்மட்டம் குறைந்து வருகிறது.

கடந்த 17–ந் தேதி 71.69 அடியாக இருந்த நீர்மட்டம் 18–ந்தேதி 71 அடியாகவும் மறு நாள் 70.40 அடியாகவும் இருந்தது.

கடந்த 20–ந் தேதி 69.93 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று 69.25 அடியாக இருந்தது.

இன்று காலை 8 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 68.98 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 2258 கனஅடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து 3500 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

பவானி சாகர் அணையில் இருந்து தினமும் ஒரு அடி தண்ணீர் குறைந்து வருவதால் அணையின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது.

இதனால் வருண பகவானை வேண்டிய படி மழையை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்கிறார்கள்.

**தமிழ்நாட்டில் நன்னீரில் மீன் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை: மீன்வள பல்கலைகழக துணைவேந்தர்**



தமிழ்நாடு மீன்வள பல்கலை கழகம், மீன்வள கல்லூரி ஆராய்ச்சி நிலையம் மற்றும் மத்திய நன்னீர் நீர்வாழ் உயிரின வளர்ப்பு நிலையம் ஆகியவை இணைந்து நிலையான மீன்வள உற்பத்தியில் தரமான மீன் குஞ்சுகளின் முக்கியத்துவம் என்பது பற்றிய கலந்துரையாடல் நிகழ்ச்சியை தஞ்சையில் இன்று நடத்தியது.

நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு மீன்வள பல்கலைகழக துணைவேந்தர் பாஸ்கரன் மணிமாறன் தலைமை தாங்கி பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:–

தமிழ்நாட்டில் 3.7 லட்சம் ஹெக்டேர் அளவுக்கு நீர்பரப்பு உள்ளது. அதில் 4.5 லட்சம் டன் வரை மீன் உற்பத்தி செய்யலாம். ஆனால் தற்போது 87 ஆயிரம் டன் மீன்தான் உற்பத்தி செய்யப்படுகிறது.

இதை அதிகப்படுத்த நபார்டு மானிய உதவியுடன் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தஞ்சை மாவட்ட மீன் உற்பத்தி அதிக படுத்துவதில் முக்கிய இடம் வகிக்கிறது. வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டில் பண்ணை குட்டை திட்டம் மூலம் மீன் உற்பத்தி அதிகமாக செய்யப்படுகிறது.

தரமான மீன்குஞ்சு உற்பத்தி செய்வதன் மூலமும் சினை மீன்களை நல்ல முறையில் பராமரித்தாலும் அதிக மீன் உற்பத்தி செய்யலாம். இதற்கான ஆராய்ச்சி நிலையம் பவானி சாகர் அணைபகுதியில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் வேளாண்மை புரட்சி, வெண்மை புரட்சி நடந்தது போல வருங்காலத்தில் மீன் உற்பத்தியிலும் பெரும் புரட்சி ஏற்படும். அதற்கு தஞ்சை மாவட்டம் வித்திடும். இந்த முயற்சிக்கு மீன்வள பல்கலை கழகம் எப்போதும் உதவ தயாராக இருக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

விகடன்

**இனி நேபாளத்தின் தேசிய விலங்கு பசு: அரசு அறிவிப்பு!**

**காத்மாண்டு:** நேபாள நாட்டின் தேசிய விலங்காக `பசு` அறிவிக்கப்பட்டுள்ளது. மதச்சார்பற்ற நாடாக தமது அரசியல் அமைப்பை மாற்றிக்கொண்ட நேபாள நாட்டின் தேசிய விலங்காக, இந்துக்களின் புனித விலங்கான பசு அங்கீகரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த புதிய அரசியலமைப்புக்கு கீழ் வந்த நேபாள அரசு, இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. மேலும், தேசிய விலங்காக பசு இருப்பதால், அதைக் கொல்ல தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்று நேபாளி காங்கிரஸ் பொதுச் செயலாளர் கிருஷ்ண பிரசாத் சித்துலா தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே, இறைச்சிக்காகப் பசுவைக் கொல்வது தடுக்கப்பட வேண்டும் என்று நேபாளத்தில் சட்டம் கொண்டு வரப்பட்டு அது நீக்கப்பட்டது. தற்போது, இந்துக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் நாட்டில் பசுவதைத் தடுப்புச் சட்டம் மீண்டும் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

நேபளாத்தின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் ஒற்றைக் கொம்புள்ள காண்டாமிருகத்தை தேசிய விலங்காக தேர்ந்தெடுக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.